வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 30.06.2021 புதன்கிழமை | இதழ் : 209 | பக்கங்கள் : 16

# பயங்கரவாத தடை சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து; வாக்குறுதியை நிறைவேற்றுமாறும் கோரிக்கை

நியூயோர்க், ஜூன் 30

சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை நீக்காவிட்டால் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையை இரத்துச் செய்யும் தனது அறிவிப்பு குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் என்றும் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

15

## பாகிஸ்தான் தூதுவர் கிளிநொச்சி விஜயம்!

கொழும்பு, ஜூன் 30

பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் மொகமட் சாட் கற்றக் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இரணைமடு இராணுவத் தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எச்.பி ரணசிங்கவை சந்தித்த அவர், இரணைமடுவில் அமைந்துள்ள நெலும்பியசவில் நிகழ்வொன்றிலும் கலந்து கொண்டார்.

இதன்போது இரு நாட்டு நட்புறவையும் வெளிப்படுத்தும் வகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

# 1,709 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,709 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 57 ஆயிரத்து 217 ஆக அதிகரித்துள்ளது.

15



## அமெ. தூதருடன் நாமல் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 30

இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இலங்கைக் கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்

15

## யாழில் மேலும் இருவர் தொற்றினால் மரணம்!

### 101 தொற்றாளர்கள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர் என்று யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 91ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நயினாதீவைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவர் நேற்று உயி

15

## 3 ஆயிரத்தை கடந்தது கொரோனா உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூவாயிரத்தைக் கடந்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக மேலும் 45 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்த்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 24 பெண்களும், 21ஆண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல்

15

## “அடுத்த 10 வாரங்களுள் நாடு முழுக்க டெல்டா திரிபு பரவும் ஆபத்து நிலை!”

கொழும்பு, ஜூன் 30

சுகாதார விதிமுறைகளை கடுமையாக பின்பற்றப்படாவிட்டால், அடுத்த 10 வாரங்களுக்குள் நாடு முழுவதும் கோவிட்-19 டெல்டா வைரஸ் திரிபு கடுமையாக பரவக்கூடும் என்று ஆரம்ப சுகாதார, தொற்றுநோய்கள் மற்றும் கோவிட்-19 நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர், மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே எச்சரித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

“60 வயதிற்கு மேற்பட்ட நபர்கள் கோவிட் -19 அல்பா வைரஸ் திரிபு தொற்றால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம்

15








## கரடிப்போக்கு சந்தி அருகே கடைக்குள் புகுந்தது பஸ்!



கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அண்மித்த பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த பஸ் ஒன்று கடை ஒன்றுக்குள் புகுந்தது. தொலைபேசி இணைப்பு கம்பத்தையும் அது சேதப்படுத்தி உள்ளது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பஸ்ஸே நேற்று மாலை வேகக்கட்டுப்பாட்டை இழந்து கரடிப்போக்கு சந்திக்கு அண்மையாக உள்ள உணவகம் ஒன்றுக்குள் புகுந்துள்ளதுடன் அருகி

15

## இப்படியும் நடக்கிறது...!

தொண்ணுறுகளின் நடுப்பகுதியில் தமிழர் தரப்புக்கும் இராணுவத்துக்கும் இடையே கடும் மோதல்கள் நடந்து கொண்டிருந்த காலம்.

அப்போது 'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த நண்பர் எஸ். எஸ். குகநாதன், கனடாவில் நடைபெற்ற விழா ஒன்றில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியது ஞாபகத்திற்கு வருகின்றது.

தமிழ் அரசு - பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரசார 'பீரங்கிகளில்' ஒருவரான புங்குடுதீவு சட்டத்தரணி எஸ்.கே. மகேந்திரனின் நூல் வெளியீட்டு விழா அது.

அங்கு பேசிய குகநாதன், 'ஈழநாடு- நடுநிலைமை பத்திரிகை' என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்.

தாயகத்தில் தமிழர் தரப்புக்கும் இலங்கைப் படைகளுக்கும் இடையே யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது இரு தரப்புக்குமிடையே ஈழநாடு நடுநிலைமை வகிக்கமுடியாது. உலகில் முதல்நிலை நடுநிலை ஊடகமாக கருதப்படும் பி.பி.சி., பிரிட்டனுக்கும் ஆர்ஜென்ரீனாவுக்குமிடையே யுத்தம் நடந்தபோது என்ன நடுநிலைமையோடா செய்தி வெளியிட்டது என்று கேட்டார்.

அதனை செவிமடுத்துக் கொண்டிருந்த கவிஞர் சேரன், ஈழநாடு ஆசிரியரின் இந்தப் பேச்சைக் கண்டித்து அன்று கனடாவில் வெளிவந்த புலி எதிர்ப்பு பத்திரிகை ஒன்றில் முழுப்பக்க கட்டுரை எழுதினார்.

பின்னர் அவர், புலிகளின் தத்துவாசிரியர்போல நடந்து கொண்டதும் ஈழநாடு ஆசிரியரை துரோகி என்றதும் வேறு கதை.

இப்போது ஏன் அவற்றை எல்லாம் எழுதவேண்டும் என்று உங்களுக்கு தோன்றலாம்.

நேற்று ஜேர்மனியிலிருந்து நண்பர் ஒருவரிடமிருந்து ஒரு மின்அஞ்சல் வந்திருந்தது. முகநூல் குறுஞ்செய்தி ஊடாக பல தடவை தொடர்புகொண்டபோதிலும் என்னிடமிருந்து பதில் இல்லை என்று குறைபட்டிருந்தார்.

நீண்ட நாட்களாக முகநூல்பக்கம் போகாததால் கவனிக்கவில்லை. அவருடன் தொலைபேசியில் பேசினேன்.

"என்ன ஊர்க்குருவியார், எப்போது பார்த்தாலும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளையே குத்திக் குதறுகிறீர். அதன் அர்த்தம் எப்படியாவது தமிழ்த் தேசியத்தை நீர்த்துப்போகச் செய்வதுதானே?" என்றார்.

நண்பரிடமிருந்து இந்த வார்த்தைகளை நான் எதிர்பார்க்கவில்லை. அவர் விசயம் தெரிந்த மனிதர் மட்டுமல்ல, இந்த ஊர்க்குருவியை நன்கு அறிந்தவர்.

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அனைவரினதும் செய்திகளை எந்த வேறுபாடுமின்றி வெளியிடுகின்றோம். ஆனால், தமிழ் தேசிய அரசியல்வாதிகள் செய்கின்ற தவறுகளை அல்லது அவர்கள் தேசியத்திற்கு மாறாகச் செய்கின்ற கைங்கரியங்களை கண்டிக்கவும் தவறுவதில்லை.

அதுமாத்திரமல்ல, அவர்களை சரியான பாதையில் தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கத் தூண்டுகின்றோம். அதன் அர்த்தம் நமது தலைவர்கள் சரியான பாதையில் தமிழ் தேசிய அரசியலில் ஈடுபடவேண்டும் என்ற விருப்பம்தான் அவ்வாறு எழுதுவதற்கு காரணமே தவிர, தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை என்பதை நண்பருக்கு புரிய வைக்க வேண்டியதாயிற்று

பண்டா - செல்வா ஒப்பந்தம் தோல்வியில் முடிந்த பின்னர், அவர்களை நம்பி ஒப்பந்தம் செய்தோம். மோசம் செய்துவிட்டார்கள் என்றோம். பின்னர், டட்லி - செல்வா ஒப்பந்தம் தோல்வியில் முடிந்தபோதும் அதையே சொன்னோம். பின்னர் ஜே .ஆருடன் நீண்டகாலம் - திம்பு வரை சென்று பேசி கடைசியில் அதன் பின்னரும் இதையே சொன்னோம்.

கடைசியாக நல்லாட்சி காலத்திலும் ரணிலையும் மைத்திரியையும் நம்பிக்கொண்டு ஐந்து வருசங்களை காலம் கடத்தினோம். முடிவில் அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று இப்போது சொல்கிறோம். தமிழ் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட பின்னரும் கூட்டமைப்பு, தானே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் போல தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள் தரப்பில் அதிகம் பேர் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் என்பதை சுட்டிக்காட்டுவதும் ஒரு தமிழ்த் தேசியக் கடமை என்றே இந்த ஊர்க்குருவி நம்புகின்றது அவ்வளவுதான்.

நண்பர் திருப்திப்படும் அளவிற்கு அவருக்கு விளக்கமளிக்க வேண்டியதாயிற்று.

**- ஊர்க்குருவி**

# இவர் சீனர் அல்லர்; முஸ்லிம் சகோதரர்

## அங்கஜன் விளக்கம் சுமந்திரன் வருத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

பருத்தித்துறை - மருதங்கேணி வீதி புனரமைப்புப் பணியில் சீனப் பிரஜை ஒருவர் ஈடுபட்டுள்ளார் என்று தெரிவித்து தமிழ்த் தேசிய



கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதி பதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது ருவிட்டரில் படமொன்றைப் பதிவேற்றியுள்ளார்.

அதில் யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் பலர் வேலையில்லாமல் திண்டாடுகின்ற நிலையில், அவர்களுக்கு ஏன் இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படவில்லை எனக் கேள்வியும் எழுப்பியுள்ளார்.

எனினும், அந்தப் புகைப் படத்தில் இருப்பவர் சீனப் பிரஜை அல்லர் எனத் தெரிவித்துள்ள பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், "அவர் இலங்கையர். இஸ்லாமிய சகோதரர். அவருடைய பெயர் மொஹமட் முஸ்தபா மொஹமட் ஹனிஃபா. அக்கரைப்பற்றைச் சேர்ந்த அவர் குடத்தனையில் திருமணம் செய்து, அம்பனில் குடியேறியுள்ளார். வீதித் திட்ட ஒப்பந்தகாரரான என். எம் நிர்மாண பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரிகின்றார்" என்று தனது ருவிட்டர் தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

இந்நிலையில், அதற்குப் பதிலளித்துள்ள சுமந்திரன் எம்.பி, "இந்த நபர் சீன நாட்டவர் அல்லர். இலங்கையர் என்பது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பிழைக்கு வருந்துகின்றேன். எதிர்காலத்தில் வடக்கில் பணிபுரியும் பிற உண்மையான சீனர்களின் படங்கள் இடுகையிடப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

## எரிபொருள் விலை உயர்வை கண்டித்து யாழில் சைக்கிள் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 30

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் நேற்று சைக்கிள் பேரணி முன்னெடுக்கப்பட்டது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பமான இந்த சைக்கிள் பேரணி, மானிப்பாய் பிரதேச சபை முன்றல் வரை சென்று நிறைவடைந்தது.

வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மானிப்பாய் பிரதேச சபை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பேரணியில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(இ-3)

### கல்வி TV CHANNEL-1

**30.06.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி TV CHANNEL - 2

**30.06.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | | புலமைப்பரிசில் - paper |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | | புலமைப்பரிசில் - paper |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | | புலமைப்பரிசில் - paper |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
30.06.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஆனி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சீனாவும் கூட்டமைப்பும்

சீனா தொடர்பான சர்ச்சைகள் தொடர்கின்றன. அண்மையில் திஸ்ஸமஹறாம வாவியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கும் சீனர்கள் சிலர், சீன மக்கள் இராணுவத்தின் சீருடையில் காணப்பட்டனர். இவர்கள் யார் என்னும் சர்ச்சைகள் எழுந்தன. அவர்கள் சீன இராணுவத்தை சேர்ந்தவர்கள் அல்லர் என்று அரசாங்கம் தெரிவித்தது. அவ்வாறாயின் சீன இராணுவத்தின் சீருடையில் தோன்றியவர்கள் யார்? இதற்கு இதுவரையில் சரியான பதில் இல்லை. நிலைமை இவ்வாறிருக்க வடக்கிலும் சீனர்கள் சட்ட விரோதமாக கால் பதித்திருப்பதாக தற்போது சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. இதனை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கின்றார்.

பூநகரி – கௌதாரிமுனை கடற்பரப்பில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட சீன நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. சீனாவின் ஆதிக்கத்தை மேலும், வலுப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவே இதனை பார்ப்பதாக கூட்டமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது. சுமந்திரன் அண்மைக்காலமாக சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது தொடர்பில் தனது கரிசனையை செலுத்தி வருகின்றார். ஆனால், மறுபுறமாக கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் சீன – இலங்கை பாராளுமன்ற நட்புறவுக் கழகத்தின் துணைத் தலைவராக இருக்கின்றார். இந்த நட்புறவு கழகத்தின் தலைவராக நாமல் ராஜபக்ஷ இருக்கின்றார்.

ஒருபுறம் வடக்கில் சீனா கால்பதிக்க முற்படுவது தொடர்பில் கூட்டமைப்பு கண்டனங்களை தெரிவித்து வருகின்றது. ஆனால், மறுபுறமோ கூட்டமைப்பிலிருப்பவர்கள் சீனாவின் நட்புறவையும் நாடுகின்றனர். வெளிவிவகாரங்களில் கூட்டமைப்பிடம் ஒரு தெளிவான கொள்கை நிலைப்பாடு இருப்பது கட்டாயமானது. ஏனெனில், கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரதான அரசியல் தலைமையாகும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் நிலைப்பாடுகளை இராஜதந்திர சமூகத்தினர் பெரிதாகக் கருத்தில் கொள்ளப் போவதில்லை. ஏனெனில், அவர்கள் தமிழ் மக்களின் பிரதான தலைமை என்னும் தகுதியை இன்னும் பெறவில்லை.

சீனாவின் செல்வாக்கு மேலும் அதிகரித்துச் செல்வதற்கான சூழல் மிகவும் பிரகாசமாகவே இருக்கின்றது. ஏனெனில், சீனர்கள் இலங்கைக்குள் அதிகமாக நுழைவதற்கான புறச் சூழல் ஏற்கனவே உருவாகிவிட்டது. சீனா பெரும் முதலீட்டு திட்டங்களை மேற்கொள்ளும் நாடுகளில், சீனர்களின் பிரசன்னமும் இயல்பாகவே அதிகரிக்கும். ஆபிரிக்க நாடுகளில் இதுதான் தற்போது நடந்துவருகின்றது. தெற்காசியாவில், ஓர் ஆபிரிக்க தன்மையை பெறப்போகும் நாடாக இலங்கை மாறிப் போனாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆளும் பொதுஜன பெரமுனவிற்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில், கட்சி ரீதியான பிணைப்பு இருக்கின்றது. ஆளுகை பரிமாற்றம் என்னும் அடிப்படையில் இரண்டு கட்சிகளின் உயர் மட்டத்தினரும் ஏற்கனவே கலந்துரையாடியிருக்கின்றனர். இந்த கலந்துரையாடலுக்கு பொதுஜன பெரமுனவின் சார்பில் நாமல் ராஜபக்ஷவே தலைமை தாங்கியிருந்தார். அவரின் தலைமையில்தான் தற்போது சீன – இலங்கை நட்புறவுக் கழகமும் இருக்கின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதற்கு முன்னர் எப்போதுமே இது போன்ற விடயம் இடம்பெற்றதில்லை. எனவே, இந்த பின்புலத்தில் இலங்கை முழுவதும் சீனர்கள் அதிகம் தோன்றுவதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை.

இதனை தமிழர் தரப்புக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன என்பது தொடர்பில், ஒரு தெளிவான கொள்கை நிலைப்பாடு அவசியம். முக்கியமாகக் கூட்டமைப்பு இதில் கூடுதல் கவனத்தை செலுத்த வேண்டும். அங்கும் இருப்போம், இங்கும் இருப்போம் பின்னர் எங்கும் இருப்போம் என்னும் அடிப்படையில் ஒரு கொள்கை நிலைப்பாடு இருக்க முடியாது.

# தூக்கிவாரிப்போட்ட கொலைச்செய்திக்கு தலைப்பிட்டு பாராட்டு பெற்றேன்!

**அனந்த பாலகிட்ணர்**

**1985**ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி இரவு எனது வாழ்நாளில் மறக்க முடியாததொன்றாகும். ஈழநாடு பத்திரிகையின் அன்றிரவு நேரக் கடமைக்குப் பொறுப்பாக இருந்தேன்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்த மேகம் சூழ்ந்திருந்த காலப்பகுதி. இருப்பினும் பத்திரிகைத் துறைக்கு ஒரு பொற்காலமாக அக்காலப்பகுதி அமைந்திருந்தது. ஒன்றுக்கும் மேற்பட்ட தமிழ் தீவிரவாத போராட்ட அமைப்புகள் அக்காலப்பகுதியில் இயங்கி வந்திருந்தன.

திரும்புமிடமெல்லாம் துப்பாக்கி சண்டைகள், குண்டு வெடிப்புகள், மின்கம்ப மரண தண்டனைகள் என்று ஓர் ஊழிக்காலமே வடக்கு - கிழக்கில் மூன்று தசாப்த காலமாக புரையோடிப்போயிருந்தது.

இத்தகைய அந்தகார சூழலிலேயே 36 ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு மட்டுமல்ல. யாழ்ப்பாணத்தின் கல்விச் சமூகத்துக்கும் பேரிடியைத் தந்திருந்த அச்சம்பவம் இடம் பெற்றிருந்தது.

இரவு நேரக்கடமையில் 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எனக்கு உதவியாக அன்று பிரபல செய்தியாளர் கா. யோகநாதனும் உடனிருந்தார்.

**செய்திதரும் வைத்தியசாலை சிற்றூழியர்**

அச்சமயம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த ஒரு சிற்றூழியர் எமக்கு பகுதி நேர செய்தியாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவ்வைத்தியசாலை சிற்றூழியர் அன்று எமக்கு கொண்டு வந்திருந்த செய்தியே அன்று என்னையும் என்னோடு இரவு நேரக்கடமையிலிருந்தோரையும் தூக்கி வாரிப்போட்டிருந்தது.


யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி (சென். ஜோன்ஸ்) அதிபர் சி.ஆனந்தராஜன் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார் என்பதே அச்செய்தியாகும்.

**ஐயா சச்சிதானந்தம்**

அச்சமயம் விநியோகப் பகுதியிலிருந்த ஐயா சச்சிதானந்தம் ஈழநாடு அலுவலகத்துக்கு வந்து கூடுதலாக ஈழநாடு பிரதிகளை அச்சடிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அதிபர் சி. ஆனந்தராஜன் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியை நன்கு மெருகூட்டி செம்மைப்படுத்திய சிரேஷ்ட செய்தியாளர் கா.யோகநாதன் என்னிடம் தலைப்பை போடும் பொறுப்பை விட்டிருந்தார்.

அப்போது நான் யோகநாதனிடம் "இது ஒரு பெரும் கல்வி நிறுவன அதிபர் சம்பந்தப்பட்ட கவலைக்குரிய செய்தி. கண்ணியமாகவும், செய்தியின் முக்கியத்துவம் பாதிக்கப்படாத வகையிலும் செய்திக்கு தலைப்பிட வேண்டும்", என்று கூறினேன். அவரும் அதனை ஏற்றுக்கொள்ளவே நான் அத்துயரகரமான செய்திக்கு போட்ட தலைப்பு இதுவே: "யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராஜன் சுடப்பட்டு மரணம்".



இதன்பின்னர் பத்திரிகையின் அனைத்துப் பக்கங்களும் ஒப்பு நோக்கப்பட்டு அச்சகப்பகுதிக்கு சென்றதையடுத்து இரவு நேரக் கடமையை முடித்து வீடு திரும்பினேன்.

**பிரதம ஆசிரியருடன் சந்திப்பு**

மறுநாள் காலை மீளவும் ஈழநாடு அலுவலகக் கடமைக்கு வந்தபோது எமது பிரதம ஆசிரியரும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகவுமிருந்த காலஞ்சென்ற என்.சபாரட்ணம் தனது கைகளில் அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான ஏனைய பத்திரிகைகளையும் ஏந்தியவாறு தனது அறையை நோக்கி வந்தார். என்னைக் கண்டதும் ஆங்கிலத்தில் தனது அறைக்குள்ளே வரும்படியும் என்னோடு கதைக்கவேண்டியுள்ளதாகவும் கூறினார்.

நான் அவரின் அறைக்குள் சென்றதும் தனது கையிலிருந்த ஏனைய யாழ்ப்பாண பிராந்திய பத்திரிகைகளையும் தனது மேசை மேல் ஒவ்வொன்றாக வைத்தார். பின்னர் ஈழநாடு பத்திரிகையையும் அருகே வைத்து எனது பிரதான செய்தித் தலைப்பை பார்த்துவிட்டு உம்மைப் பாராட்டவே அழைத்தேன் என்று கூறினார்.


அப்போது "ஏன் சேர் இவ்வாறு கூறுகின்றீர்கள்?", என்று கேட்டேன். அதற்கு அவர் கூறியது இதுவே: "சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் கல்விச் சமூகத்தில் உயர்வான ஒரு நிலையிலிருப்பவர். அவருக்கு ஏற்பட்ட அகால மரணத்தை மிகக்கண்ணியமாகத் தலைப்பிட்டுள்ளீர் என்று பிரதம ஆசிரியர் என்னிடம் கூறினார்.

இதன்பின்னர் ஏனைய பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வந்திருந்த அதிபர் ஆனந்தராஜாவின் மரணம் பற்றிய செய்தியையும் எனக்கு காண்பித்தார்.

அத்துடன் அத்தலைப்புச்செய்திகள் யாவும் செய்தி தலைப்புகள் போலன்றி பிரேத பரிசோதனை அறிக்கை போன்று குண்டுகள் துளைத்த விதம் மற்றும் அவரின் சடலம் இருந்த நிலைபற்றி ஒரு கண்ணியம் தவறிய நிலையில் வெளி வந்திருப்பதாக என்னிடம் கூறினார்.

கடந்த 26ஆம் திகதி மறைந்த யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் சி.ஆனந்தராஜாவின் 36ஆவது நினைவு தினத்தை அவரின் காலத்தைச்சேர்ந்த மாணவர்கள் பலரும் நினைவு கூர்ந்திருந்தனர். அச்சமயம் அக்கல்விமானின் மரணச்செய்தியை அன்று ஈழநாடு பத்திரிகையில் நான் கையாண்ட விதமே அவரின் நினைவு தினத்தில் எனது மனக்கண்முன் வருவதாக இருக்கின்றது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூன் - 30 புதன்கிழமை**
**பிலவ வருடம் - ஆனி 16**
**நல்ல நேரம் : 9.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 1.30**
**திதி : சஷ்டி**



## இன்றைய ராசிபலன்

**30.06.2021**

**மேடம்**
எதிர்பார்த்தபடி முன்னேற்றமான சூழ்நிலையை அடைவீர்கள். உழைப்பின் பலனை பெறுவீர்கள். மனம் நிறைவடையும். மனதில் மகிழ்ச்சி நிலவும். பெண்கள் நன்மை காண்பீர்கள்.

**இடபம்**
இன்று சகஊழியர்களுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். மனம் விட்டுப் பேசுவதால் பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும். சிறிதளவு அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**மிதுனம்**
குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெற்றோர் ஆதரிப்பர். சக ஊழியருக்குச் சற்று உதவி செய்து வாழ்த்தப்படுவீர்கள். யாரையும், எதற்கும் ஓரளவுக்குமேல் நம்ப வேண்டாம்.

**கடகம்**
பொறுப்புணர்வு அதிகரிக்கும். பிரச்னை ஒன்று முடியும். பேச்சில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை காணும் நாளாக இருக்கும்.

**சிம்மம்**
லாபமும், முன்னேற்றமும் இருக்கும். சோர்வான நாள். முன்னேற விரும்புபவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். செலவைச் சற்று நிதானமாக செய்வது நல்லது.

**கன்னி**
கூடுதல் கவனத்துடன் எதையும் செய்வது நல்லது. பரபரப்புடன் கூடிய நாளாக அமையும். மாலைக்கு பின் நிம்மதி வரும். நண்பர் வீட்டில் சுபநிகழ்ச்சி நடக்கும். மகிழ்ச்சி கூடும்.

**துலாம்**
உங்கள் முயற்சியால் மற்றவர்களுக்கு நன்மை நிகழும். கலப்பினமான பலன்கள் சேர்ந்து அமையக்கூடிய நாள்.நினைத்த விஷயம் ஒன்று நிறைவேறி மகிழ்விக்கும்.

**விருட்சிகம்**
குடும்ப ஒற்றுமைக்கு நீங்கள் கவனமாகப் பேச வேண்டும். புதிய வேலைக்கு முயற்சிப்பவர்களுக்குத் தகவல் தாமதமாகும். நாளின் பிற்பகுதியில் நிம்மதி தரும் செய்தி எதிர்பாராமல் கிடைக்கும்.

**தனுசு**
வாய்ப்பு கிடைத்தாலும் பயன்படுத்துவது உங்கள் கையில்தான் உள்ளது பொருளாதாரம் உயரப் பாடுபட்டுச் சிறிது வெற்றியடைவீர்கள். இன்று நல்ல நாளாக அமையும். பரபரப்பாகச் செயல்படுவீர்கள்.

**மகரம்**
பல நாள் பாடுபட்டதற்கு நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.நெருங்கிய உறவினர் வீட்டில் சுபநிகழ்ச்சி நடக்க வாய்ப்பு உள்ளது. குடும்ப விஷயத்தில் தடைகளுக்குப் பிறகு நற்செய்தி வரும்.

**கும்பம்**
குழந்தைகளுக்கான செலவு சற்றுக் கூடுதலாக இருக்கும்.மனநிம்மதி ஏற்படும். தந்தை விரும்பிய விஷயம் கிடைக்கும். சிறிது பணிந்து போக வேண்டியிருக்கலாம். மனம் அலைபாயும்.

**மீனம்**
காத்திருந்த நல்ல செய்தி வருவது தாமதமாகும். பொறுமை தேவை. நண்பர்களுக்கு உங்களால் நல்ல விஷயம் ஒன்று நிகழும். ஆரோக்யம் பற்றிய பயங்கள் எதுவும் தேவை இல்லை.

# பிரச்னையை தீர்ப்பதற்கு உத்தரவாதம் கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்

*திருச்சி, ஜூன் 30*

திருச்சி மத்திய முகாம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் கடந்த 20 நாட்களாக தொடர்ந்த போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளார்கள். தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையகத்தின் ஆணையாளர் இவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தி, பிரச்னைக்குத் தீர்வு காண்பதாக உத்தரவாதம் அளித்ததையடுத்து, அவர்கள் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளனர்.



தங்கள் மீதான வழக்குகளுக்கு நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டு, தண்டனைக் காலம் முடிந்தும், சிறையில் பல ஆண்டுகளாக அடைக்கப்பட்டுள்ளதால் தங்களை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்தப் போராட்டதை நடத்தி வந்தனர்.

அவர்களின் போராட்டத்தைக் குறித்து அறிந்து கொள்ள அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையகத்தின் ஆணையர் ஜெசிந்தா லாசரஸ் நேரில் சந்தித்து அவர்களோடு நடத்தினார்.

மேலும் அவர்களின் கோரிக்கைகளை அரசிடம் தெரிவித்து, அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்களின் காத்திருப்புப் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர்.

# பெற்றோல், டீசல் விலை உயர்வை கண்டித்து தமிழகம் முழுவதும் தே.மு.தி.க. ஆர்ப்பாட்டம்

## விஜயகாந்த் அறிவிப்பு



*சென்னை, ஜூன் 30*

பெற்றோல், டீசல் விலை உயர்வு மற்றும் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்காக மத்திய அரசை தே.மு.தி.க. கண்டிக்கிறது. இதற்காக தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவற்கு தே.மு.தி.க. ஏற்பாடு செய்திருப்பதாக அதன் தலைவர் விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-


"பெற்றோல், டீசல் விலை உயர்வு மற்றும் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்காக மத்திய அரசை தே.மு.தி.க. கண்டிக்கிறது. மேலும் மதுக்கடைகள் திறக்கப்பட்டுள்ளதற்கும், கட்டுமான பொருட்கள், அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு ஆகியவற்றுக்காக தமிழக அரசை தே.மு.தி.க. கண்டிக்கிறது.

இந்த காரணங்களுக்காக மத்திய, மாநில அரசுகளை கண்டித்து தே.மு.தி.க. சார்பில் வருகிற 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்" என விஜயகாந்த அறிவித்துள்ளார்.

# வைரலாக பரவும் முதலமைச்சர் ஸ்டாலின் உடற்பயிற்சி செய்யும் வீடியோ காட்சிகள்

*சென்னை, ஜூன் 30*

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தன்னுடைய கடுமையான வேலைப் பளுவுக்கு மத்தியிலும், உடற்பயிற்சியை மேற்கொள்ளும் வீடியோ ஒன்று வெளியிடப்பட்டு சமூக ஊடகங்களில் அது வைரலாகப் பரவி வருகின்றது.



தேர்தலில் வெற்றிபெற்று மு.க.ஸ்டாலின் முதலமைச்சர்ஆனதும்அவர்கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் நிர்வாக பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தார். ஸ்டாலினுக்கு உடற்பயிற்சி செய்வதில் அதிக ஆர்வம் உண்டு. தனது உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் அக்கறை கொண்ட அவர் தினமும் உடற்பயிற்சி செய்வதை வழமையாக வைத்துள்ளார்.

நடைப்பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், ஜிம்மில் உடற்பயிற்சி செய்வதை அவர் வழக்கமாக கொண்டுள்ளார். தேர்தல் பிரசாரத்தின் போது பெரும்பாலும் அவர் நடைப்பயிற்சி மேற்கொண்டபடியே வாக்கு சேகரித்தார். தேர்தலில் வெற்றிபெற்று ஸ்டாலின் முதலமைச்சர் ஆனதும் அவர் கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் நிர்வாக பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தார்.

தற்போது கொரோனா தொற்று குறைந்து வரும் நிலையில் உடற்பயிற்சியில் ஈடுபடுகிறார். அவர் ஜிம்மில் உடற்பயிற்சி செய்யும் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. அந்த வீடியோவில் மு.க.ஸ்டாலின் நடைப்பயிற்சி செய்கிறார். சைக்கிள் ஓட்டுகிறார். ஜிம்மில் மிகவும் உற்சாகமாக உடற்பயிற்சி மேற்கொள்கிறார். மு.க.ஸ்டாலினுக்கு தற்போது 68 வயது. இந்த வயதிலும் அவர் மிகவும் சுறுசுறுப்பாக உடற்பயிற்சி செய்வது பார்ப்பவர்களை மிகவும் கவர்ந்து வருகிறது.

# அரசுக்கு எதிராகத் தீப்பந்த போராட்டம்



கல்முனை, ஜுன் 30
அரசுக்கு எதிரான கோஷங்களுடன் மக்கள் விடுதலை முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அடங்கிய பிரமுகர்கள் கண்டனத் தீப்பந்தப் போராட்டத்தை கல்முனை நகரில் நேற்று முன்தினம் இரவு முன்னெடுத்தனர்.

இதன்போது அரிசி விலை உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, எரிபொருள் விலை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிராகப் பல வேறு கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

சமூக இடைவெளிகள் பேணப்பட்டு, முகக்கவசங்கள் அணிந்து, போக்குவரத்துக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படுத்தாமல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### தடுப்பூசி நிபுணர் குழுவிலிருந்து

## பேராசிரியர் நீலிகாவும் திடீரென இராஜினாமா

கொழும்பு, ஜுன் 30
ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் மானுடவியல் மற்றும் மூலக்கூறு ஆய்வுகள் துறையின் தலைவர் பேராசிரியர் நீலிகா மலவிகே, மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகள் குறித்த சுயாதீன நிபுணர் ஆலோசனை குழுவில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களால் அவர் குறித்த பதவியை இராஜினாமா செய்தார் என்று நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, கொழும்பு வடக்கு (ராகமை) மருத்துவ



பீடத்தின் இணைப் பேராசிரியர் ஏ.பத்மேஷ் இந்தக் குழுவிலிருந்து இராஜினாமா செய்தார்.

இதனிடையே, குறித்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆனந்த விஜேவிக்ரம, பேராசிரியர் ரஜீவ டி சில்வா, பேராசிரியர் காந்தி நாணயக்கார, பேராசிரியர் சன்ன ரணசிங்க, பேராசிரியர் சரோஜ் ஜயசிங்க, பேராசிரியர் லக்குமார் பெர்னாண்டோ மற்றும் மருத்துவர் ஹசித திசேரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இ)

## யானை தாக்கி பெண் மரணம்

கொழும்பு, ஜுன் 30
நவகத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலிகம பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பெண்ணொருவர் உயிரிழந்தார் என்று நவக்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 68 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தீர்வு இல்லையேல் தொடர் போராட்டம்

### அரசுக்கு தாதியர் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, ஜுன் 30**
**தமது கோரிக்கைகளுக்கு இன்றைய தினத்துக்குள் தீர்வுகளை முன்வைக்காவிட்டால் நாடு பூராகவும் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டி வரும் என்று அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அரச வைத்தியசாலைகளில் தாதிமார் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் 8 அம்சக் கோரிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு சங்கம் முன்வைத்துள்ளது. ஆனால், இதுவரையில் அவற்றுக்குத் தீர்வுகள் கிடைக்கவில்லை என்று அந்தச் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப்பிரிய நேற்று தெரிவித்துள்ளார்.

இதனால் இன்று வரையில் அரசுக்குக் கால அவகாசத்தை வழங்குவதாகவும், அதற்குள் தீர்வுகளை முன்வைக்காவிட்டால் முன்னறிவித்தல் எதுவும் இன்றி தொடர் தொழிற்சங்கப் போராட்டத்துக்குச் செல்வோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி தாதிமார் உள்ளிட்ட சுகாதார உத்தியோகத்தர்கள் கடந்த வாரத்தில் நாடு பூராகவும் வைத்தியசாலைகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அதிக விலைக்கு அரிசி விற்றால் இனி ஒரு இலட்சம் ரூபாய் அபராதம்

### அமைச்சர் மஹிந்தானந்த எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 30
நிர்ணய விலையை விடவும் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்பட்டால் இனி ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நிர்ணய விலையை விடவும் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்தால் தற்போது 2 ஆயிரத்து 500 ரூபாயே அபராதம் விதிக்கப்படுகின்றது. இப்பணத்தை செலுத்தி அரிசி ஆலை உரிமையாளர்கள் இலகுவில் தப்பிவிடுகின்றனர். எனவேதான் 2 ஆயிரத்து 500 ரூபாயை ஒரு இலட்சமாக



அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# நுவரெலியாவில் இரு பிள்ளைகளின் தாய் கத்தியால் வெட்டி படுகொலை!

### சந்தேகத்தில் இளைஞர் ஒருவர் கைது

நுவரெலியா, ஜுன் 30
நுவரெலியா மாவட்டம், பூண்டுலோயா பழைய சீன் தோட்டத்தின் லயன் குடியிருப்பு ஒன்றில் குடும்பப் பெண் ஒருவர் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

பெண்ணின் சடலத்தை மீட்ட பூண்டுலோயா பொலிஸார், பெண்ணைக் கொலை செய்த சந்தேகத்தில் இளைஞர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

பழைய சீன் தோட்டத்தில் வசித்த 47 வயதான பெருமாள் மாலா எனும் இரு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

தனிப்பட்ட தகராறே கொலைக்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் அதே தோட்டத்தில் வசிக்கும் 27 வயதான இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் சடலம் வீட்டின் சமையலறையில் இருந்து மீட்கப்பட்டது எனத் தெரிவித்த பொலிஸார், சடலம் மீட்கப்படும்போது துணிகளால் சுற்றப்பட்டிருந்தது எனவும் தெரிவித்தனர்.



சடலம் நாவலப்பிட்டி நீதிவானின் மரண விசாரணைகளின் பின் பிரேத பரிசோதனைகளுக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பூண்டுலோயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# ஆடைத்தொழிற்சாலையில் 41 பேருக்குக் கொரோனா!

பத்தேகம, ஜுன் 30
பத்தேகம பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட இதிகஸ்கெட்டிய பிரதேசத்தில் இயங்கும் ஆடைத்தொழிற்சாலை யில் பணியாற்றி வருகின்ற 41 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

260 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையிலேயே 41 பேருக்குத் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களில் தொழிற்சாலையின் நிர்வாகிகள் 4 பேர் உள்ளடங்கியுள்ளனர் என்று பொதுசுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

தொற்றுக்குள்ளான அனைவரும் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொழிற்சாலையில் பணியாற்றிவரும் மேலும் 400 பேரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பத்தேகம மற்றும் அதனை அண்மித்தப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே குறித்த தொழிற்சாலையில் பணியாற்றி வருகின்றனர் என்பதால் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்களைக் கண்டறிவதற்கான நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

# கரையொதுங்கிய கடலாமைகளின் எண்ணிக்கை 150ஆக அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 30

கடந்த மாதம் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பாதிப்பினால் உயிரிழந்து கரையொதுங்கிய கடலாமைகளின் மொத்த எண்ணிக்கை 150 ஆக அதிகரித்துள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# டெல்டா தொற்றுக்குள்ளான மேலும் மூவர் அடையாளம்!

கொழும்பு, ஜூன் 30

இந்தியாவில் பரவிவரும் கொரோனா வைரஸின் டெல்டா திரிபு தொற்றுக்கு உள்ளான மேலும் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த மூவரும் தற்போது கந்தக்காடு இடைத்தங்கல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனரென அவர் கூறினார்.

குறித்த மூவரும் கொழும்பு நகரில் நிர்மாணப்பணிகள் இடம்பெறும் பகுதியொன்றில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பஹாவில் தொற்று உச்சம்!

## ஒருநாளில் 337 பேர் அடையாளம்

**கொழும்பு, ஜூன் 30**

**நாட்டில் நேற்று மாலைவரையான பதிவாகிய ஆயிரத்து 890 கொரோனா நோயாளர்களில் அதிகமானோர் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.**

அதன்படி, கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 337 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக களுத்துறை மாவட்டத்தில் 268 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தில் 198 பேருக்கும் கொழும்பு மாவட்டத்தில் 194 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்தில் 121 பேருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 87 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தின் மதிப்புமிக்க டயானா விருது 2021; யாழ்.பெண் உள்ளிட்ட 2 இலங்கையர் வென்றனர்!




கொழும்பு, ஜூன் 30

இங்கிலாந்தில் வழங்கப்படும் 'த டயானா' 2021 விருது இரண்டு இலங்கை பெண்களுக்கும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த பெண்ணொருவரும், கொழும்பை சேர்ந்த பெண் ஒருவருக்கும் இந்த விருது வழங்கப்பட்டன.

யூரியூபில் திரையிடப்பட்ட 2021 மெய்நிகர் டயானா விருது வழங்கும் விழாவின்போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனோஜிதா சிவாஸ்கரன் மற்றும் கொழும்பைச் சேர்ந்த ஜனித் பிரபாஷ்வரா பெரேரா ஆகியோர் நேற்றுமுன்தினம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் இங்கிலாந்து இளவரசர் ஹரி கலந்து கொண்டார்.

சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் செயல்படுபவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

சமாதானம் மற்றும் நல்லிணக்க நிகழ்ச்சி நிரலில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புள்ளவராக ஜனித் பிரபாஷ்வரா பெரேராவை தேர்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இளைஞர் அமைதி கட்டமைப்பாளராக அவர் பணியாற்றியது இலங்கைக்கு பயனளித்தது. சர்வதேச சமூகத்திலும். அமைதி வழக்கறிஞராக, ஆர்வலர், கல்வியாளர் மற்றும் ஆராய்ச்சியாளராக சமாதானம் மற்றும் சர்வதேச அபிவிருத்தி ஆகிய இரண்டுக்கும் ஜனித் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.

2013 முதல், ஜனித் தன்னார்வ, அமைதி கட்டமைத்தல் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். அவர் அகதிகள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அக்கறை கொண்ட பிற நபர்களுடன் நெருக்கமாக பணியாற்றியுள்ளார். அவரது பணியின் மூலம் ஒரு நேர்மறையான மற்றும் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்த முயன்றார். சமாதானத்தை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கை ஜனித் நம்புகிறார். மேலும் இளைஞர்கள் முன்னிலை வகிக்கவும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தவும் தூண்டுகிறார்.

அனோஜிதா சிவாஸ்கரன் இலங்கையில் 4 ஆண்டுகளாக அடிமட்ட சிவில் சமூகங்களுடன் பணிபுரியும் ஒரு இளம் அமைதி ஆர்வலர் ஆவார். யுத்த வலயத்தின் மத்தியில் இலங்கையின் உள் நாட்டு யுத்தத்தின் மிக மோசமான கட்டத்தில் பிறந்து வாழ்ந்த ஒரு நபராக, நாட்டில் அமைதியை நிலைநிறுத்துவதில் அவர் ஆர்வமாக உள்ளார். அவர் இலங்கையின் மூன்று மொழிகளையும் பேசுகிறார். ஆங்கிலம் மற்றும் சிங்களம் சமமாக சரளமாக பேசுகிறார்.

அவர் களனி பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்றார். இலங்கையில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான ஒருங்கிணைந்த தீர்வாக இளைஞர்களை மேம்படுத்துவதும் அவர்களை "அமைதி முகவர்களாக" பயன்படுத்துவதையும் அனோஜிதா நம்புகிறார். ஆகையால், இளைஞர்கள் மற்றும் பல்வேறு மத சமூகங்களுடன் அவர் தொடர்ந்து ஈடுபடுகிறார் என தேர்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் இணையவழி கற்றல் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான இணையவழிக் கற்றலை விருத்தி செய்வது தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது இணைய வழியில் கற்றலை மேற்கொள்வதற்கு மாணவர்களுக்கு உள்ள பிரச்னைகள் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேசி உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன், மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் , வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# சரியான வெளியுறவு கொள்கை இலங்கையில் இன்னும் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி விசனம்

கொழும்பு, ஜூன் 30

வல்லரசு நாடுகளுக்கு இடையே மோதல்களை உருவாக்கும் இடைநிலை நாடாக இலங்கை மாறிவிட்டது என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும் நாட்டில் ஒரு முறையான வெளியுறவுக் கொள்கை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். எனவே, இந்த விடயம் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாட்டின் தலைவர் பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# அம்பாந்தோட்டை மாவட்டம் சீன காலனித்துவத்தின் கீழா?

## தேசிய பிக்கு முன்னணி கேள்வி

கொழும்பு, ஜூன் 30

தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் பேச்சளவில் மாத்திரம் செயல்படுத்தப்படுகின்றன. அம்பாந்தோட்டை மாவட்டத்தை சீன காலனித்துவத்தின் கீழ் கொண்டு வரும் முயற்சியா திஸ்ஸமஹராம வாவி புனரமைப்பு ஊடாக முன்னெடுக்கப்படுகிறது என்ற சந்தேகம் எழுந்துள்ளது என தேசிய பிக்கு முன்னணியின் பொதுச்செயலாளர் வகமுல்லே உதித தேரர் தெரிவித்தார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நாட்டில் ஒற்றையாட்சி முறைமையை உறுதிப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ஆட்சியமைத்தார்.

ஒரு நாடு - ஒரு சட்டம் என்ற கொள்கை வெறும் பேச்சளவில் மாத்திரம் பின்பற்றப்படுகிறது. சீன நாட்டவர்கள் நாட்டின் பொதுச் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாக செயல்படுவதை காண முடிகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க திஸ்ஸமஹராம வாவியை புனரமைக்கும் பணிகளை சீன நாட்டவர்கள் முன்னெடுத்துள்ளார்கள். இந்த வாவியை புனரமைக்கும் திறமை தேசிய மட்டத்தில் உள்ள பொறியியலாளர்களுக்கு கிடையாதா?

நாட்டின் மரபுரிமைகளை பிற நாட்டவர்கள் வசம் ஒப்படைப்பது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

திஸ்ஸமஹராம வாவி புனரமைப்பில் ஈடுப்பட்ட சீன நாட்டவர்கள் அணிந்திருந்த ஆடை சீன நாட்டு இராணுவச் சீருடையை ஒத்தது என குறிப்பிடப்பட்டது. இவ்விடயம் குறித்த அரசாங்கமும், சீன தூதரகமும் குறிப்பிடும் கருத்துக்கள் முன்னுக்கு பின் முரணானதாக காணப்படுகின்றன.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீன நாட்டவர்கள் அபிவிருத்திப் பணிகளிலும், பாரம்பரிய கைத்தொழில் நடவடிக்கைகளிலும் ஈடுப்படுகிறார்கள். இதனை சாதாரணமாகக் கருத முடியாது. வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்களை மீட்டிப்பார்த்துக் கொள்வது அவசிமாகும். அம்பாந்தோட்தோட்டை மாவட்டத்தை சீன காலனித்துவ ஆட்சியின் கீழ் கொண்டு வரும் முயற்சியா? திஸ்ஸமஹராம வாவி புனரமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்படுகிறது என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது-என்றார்.

# வழிபாட்டு தலங்களுக்கும் உலர் உணவு விநியோகம்

கொழும்பு, ஜூன் 30
கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விகாரைகள் மற்றும் ஏனைய மதஸ்தலங்களுக்கு 5000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுகள் அடங்கிய பொதிகளை விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

லங்கா சதொச ஊடாக குறித்த உலர் உணவுகளை கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பொதிகள் இனங்காணப்பட்ட விகாரைகள் மற்றும் ஏனைய மதஸ்தலங்களுக்கு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பஸில் ராஜபக்ஷ குறித்து இன்னும் முடிவு இல்லை!

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

**கொழும்பு, ஜூன் 30**
**பஸில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்பது மற்றும் அமைச்சராகக் கடமைகளை பொறுப்பேற்பது குறித்து இன்னும் ஒரு முடிவு எட்டப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனை தெரிவித்தார்.

பஸில் பாராளுமன்றத்துக்கு நுழைவது தொடர்பான தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மேற்கொள்வார் என்றும் அவர் கூறினார்.

இதற்கு முடிவு எட்டப்படும் சந்தர்ப்பத்தில் பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசம் குறித்து அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்துக்கு செல்வதற்கு ஆளும் தரப்பின் 36 பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியுள்ளனரென தகவல்கள் வெளியாகியுள்ளன.



# திருமலை கடற்கரையில் இறந்து கரையொதுங்கிய அரியவகை சுறா

கொழும்பு, ஜூன் 30
திருகோணமலை- குச்சவெளி, கல்லராவ கடற்கரையில் இறந்த நிலையில் அரியவகை சுறா மீன் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கல்லறாவ மீன்பிடி கிராமத்திலுள்ளவர்கள், கரைவலை மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும்போது, குறித்த வகை மீன் பல தடவைகள் அவர்களின் வலையில் சிக்கியுள்ளது.

இதன்போது அவர்கள், அந்த சுறா மீனை பாதுகாப்பாக மீண்டும் கடலுக்குள் அனுப்பிவைத்துள்ளனர்.

இந்நிலையில் அந்த மீன் இறந்த நிலையில் நேற்று கரை ஒதுங்கியதாக மீனவர்கள் தெரிவித்தனர். சம்பவம் அறிந்து அவ்விடத் துக்கு சென்ற வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணையை முன்னெடுத்தனர்.

# நாட்டை அபிவிருத்தி செய்வதில் ராஜபக்ஷ மும்மூர்த்திகள் தோல்வி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30
நாட்டை அபிவிருத்தி செய்வதில் ராஜபக்ஷ மும்மூர்த்திகளுமே தோல்வி கண்டுள்ளனர். எனவே, குடும்ப ஆட்சியொன்றுக்கு மீண்டும் வாய்ப்பளிக்காது மக்கள் சிந்தித்து செயல்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ராஜபக்ஷ ஆட்சி ஆரம்பமான காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ நாட்டை மேம்படுத்துவார் என்று கூறினார்கள். அவரின் தோல்வியையடுத்து கோட்டாபய ராஜபக்ஷ வந்தால் சுபீட்சமான நாட்டை உருவாக்குவார் என்றனர். தற்போது அவரும் தோல்வியடைந்துள்ளதால் பஸில் ராஜபக்ஷவை கூறுகின்றனர். ஆனால், அவராலும் எதனையும் செய்துவிட முடியாது.

பஸில் ராஜபக்ஷ பிறந்த நாள் முதல் அமெரிக்காவின் - லொஸ்ஏஞ்சல் நகரில் வாழ்ந்து தற்போது இலங்கை யின் நிலைமையைக் கண்டு, இங்கு வருகை தந்து நிலைமை களை மாற்றக்கூடிய மாயா ஜாலக்காரர் அல்லர். காரணம் பொதுஜன பெரமுன ஆட்சி ஆரம்பித்த நாள்முதல் அவரே இந்த அரசாங்கத்தை நிர்வகித்தார். கோவிட் பரவல் ஆரம்பித்தபோது இரு ஜனாதிபதி செயலணிகளை நியமித்தார். அந்த இரு செயலணிகளின் செயல்பாடுகளுமே வெற்றி பெறவில்லை-என்றார்.



# கொக்குவிலில் இரு வீடுகள் மீது வாள்வெட்டுக்குழு தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 30
கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று மாலை இரு வீடுகளுக்குள் நுழைந்த வாள்வெட்டு வன்முறைக் குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

4 மோட்டார் சைக்கிள்கள் வாள்களுடன் வந்த 9 பேர் கொண்ட வாள்வெட்டுக்குழு வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்த தளபாடங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள், வீட்டுக்கதவு என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையிலேயே இந்த தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றனவென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# 2,222 குணமடைவு

கொழும்பு, ஜூன் 30
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்றுவந்த மேலும் 2,222 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பூரண குணமடைந்தோரின் மொத்த எண் ணிக்கை 223,471ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார சீர்திருத்த செயற்திட்டத்தை முன்வைக்கவேண்டியது அரசின் கடப்பாடு

## சுட்டிக்காட்டுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 3
பொருளாதார ரீதியில் நாடு பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அதனை எதிர்கொண்டு சீர்செய்வதற்குரிய செயல்திட்டத்தை முன்வைக்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு இருக்கின்றது. நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரையில் பொருளாதாரத்தை சீரமைப்பதற்கான செயல்திட்டங்கள் தொடர்பில் எந்தவொரு விடயங்களும் கூறப்படவில்லை. எனவே, நிதியமைச்சர் என்ற ரீதியில் பிரதமரேனும் இதுகுறித்துத் தெளிவுபடுத்த முன்வரவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படும் முன்கூட்டியே திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கை காரணமாக நாளாந்தம் வாழ்க்கைச்செலவு அதிகரித்துவரும் அதேவேளை, பொதுமக்களும் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதாகக்கூறி, அரசாங்கத்தினால் நிர்ணய விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்ட போதிலும் அது முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறித்த வர்த்தமானி அறிவித்தல் கருத்தில்கொள்ளப்படாமல் சந்தையில் பொருட்களில் விலைகள் பெருமளவு அதிகரித்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பொதுமக்கள் ஏற்கனவே பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் வேளையில், அரசாங்கம் அதற்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாமல் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். அரிசியின் நிர்ணய விலை தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு சந்தையில் அரிசியைக் கொள்வனவு செய்ய முடியாதுள்ளது.

சந்தையில் ஒரு கிலோ சம்பா அரிசி 150 ரூபாய் தொடக்கம் 200 ரூபாய் விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. இதேபோன்று ஒரு கிலோ நாட்டரிசி 120 ரூபாய் தொடக்கம் 200 ரூபா விலைக்கும் ஒரு கிலோ வெள்ளைப்பச்சை அரிசி 115 ரூபாய் தொடக்கம்125 ரூபாய் விலைக்கும் சிவப்புப்பச்சை அரிசி கிலோ ஒன்று 110 ரூபாய் தொடக்கம் 120 ரூபாய் விலைக்கும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது. எனினும் அரிசிக்கான நிர்ணய விலை தொடர்பாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் ஒரு கிலோ சம்பா அரிசியின் நிர்ணயவிலை 98 ரூபாயாகவும் நாட்டரிசி மற்றும் பச்சையரிசி ஒரு கிலோவின் நிர்ணயவிலை 93 ரூபாயாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிகரித்திருப்பதால் பஸ் கட்டணத்தையும் அதிகரிக்குமாறு பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்திருக்கும் அதேவேளை, ஓட்டோ ஓட்டுநர்களும் எவ்வித மட்டுப்பாடுகளுமின்றி கட்டணத்தை அதிகரித்திருக்கின்றார்கள். இந்நிலையில் உணவுப்பொருட்கள் மாத்திரமன்றி, அனைத்து சேவைகளுக்கான கட்டணத்தையும் கட்டுப்படுத்தும் இயலுமையை அரசாங்கம் இழந்திருக்கின்றது. இவற்றுக்கு மத்தியில் தற்போது விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அவசியமான உரத்தைப் பெற்றுக்கொள்வதில் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். அதனால் அடுத்த வருடத்தில் உணவுப்பஞ்சம் ஏற்படக்கூடிய நிலை தோற்றம் பெற்றிருக்கின்றது.

மேலும், அண்மையில் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரையின்போது பொருளாதார செயல்திட்டம் தொடர்பில் எவ்வித விடயங்களும் கூறப்படாத நிலையில், நிதியமைச்சர் என்ற வகையில் பிரதமரேனும் இதுகுறித்துத் தெளிவுபடுத்த வேண்டும்-என்றார்.

# வட மாகாணத்தில் தெங்குசார் பொருளாதாரம்






**தேங்காயை மூலப்பொருளாக பயன்படுத்தி பெறுமதி அதிகரிப்பு செய்வதற்கான தொழில்நுட்பம் மற்றும் அவ்வுற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் என்பன வட மாகாணத்தில் சவாலாகவே உள்ளது.**

இலங்கையில் ஏற்றுமதி வருமானத்திற்காக பயிரிடப்படும் பெருந்தோட்ட பயிர்களில் தென்னை மட்டுமே வட மாகாணத்தில் பயிரிடக்கூடியது. தேயிலை மற்றும் இறப்பர் குறிப்பிட்ட ஒரு சில பிரதேசங்களிலேயே பயிரிடக்கூடியதுடன் இவை மேற்கத்தேயர்களால் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்ட பயிர்களாகும்.

ஆயினும் தென்னையானது எமது பிரதேசத்திற்கே உரிய தனித்துவமான வளமாகும். இதனை ஏனைய பயிர்களை போன்று நவீன தொழில்நுட்ப உதவியுடன் எல்லா நாடுகளிலும் பயிரிட முடியாது. எனவேதான் இது குறிப்பிட்ட சில நாடுகளிலேயே உற்பத்தியாகின்றதுடன் இலங்கை தெங்குசார் உற்பத்தியில் உலக அளவில் 4ஆவது இடத்தில் உள்ளது.

இதன் உற்பத்திகளை சிரட்டை, மட்டை மற்றும் சொட்டு சார்ந்ததாக வகைப்படுத்தலாம். வட மாகாணத்தில் தெங்கு உற்பத்திகள் தென் மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. எமது மாகாணம் உற்பத்தி செய்யும் தேங்காய்களில் பெருமளவு நேரடி நுகர்ச்சிக்கும் குறைந்த அளவு எணணெய்க்காகவும் பயன்படுத்தப்படுவதுடன் கணிசமான தொகை தென் பகுதி சந்தைகளிற்கே செல்கின்றது. ஏனைய சிரட்டை மற்றும் தும்பு சார் உற்பத்திகள் தொடர்பில் பார்ப்போமேயானால் பெரும்பாலான சிரட்டை மற்றும் மட்டை வீட்டுதுறையினரினால் விறகு தேவைக்கு பயன்படுத்தப்படுவதோடு மிகுதி தென் பகுதி வியாபாரிகளால் உற்பத்திசாலைகளிற்கு எடுத்து செல்லப்படுகின்றது.

வட மாகாணத்தின் பெருமளவான தேங்காய்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிற்கு சென்று பல்வேறுபட்ட உற்பத்தி செயன்முறைக்கு உட்பட்டு மிகவும் கவர்ச்சிகரமான முடிவுப்பொருட்களாக சர்வதேச சந்தைக்கு செல்வதுடன் பெருமளவான ஏற்றுமதி வருமானத்தையும் ஈட்டித்தருகின்றது. இங்கு மிகவும் வருந்தத்தக்க விடயம் என்னவெனில் உற்பத்தி செய்யும் விவசாயியை விட அதனை மூலப்பொருளாக கொண்டு பெறுமதி அதிகரிக்கும் நிறுவனங்கள் அதிக வருமானம் ஈட்டுகின்றனர்.

தேங்காயை மூலப்பொருளாக பயன்படுத்தி பெறுமதி அதிகரிப்பு செய்வதற்கான தொழில்நுட்பம் மற்றும் அவ்வுற்பத்திகளுக்கானகான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் என்பன வட மாகாணத்தில் சவாலாகவே உள்ளது. அத்துடன் எமது உள்ளூர் தேங்காய்கள் வெளிநாடுகளில் உள்ளவர்களின் உணவிற்கு சுவை மற்றும் ஊட்டச்சத்துகளை வழங்குவதுடன் நாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தரம் குறைந்த மலிவான எண்ணெய் வகைகளை உட்கொண்டு நோயாளிகளாக மாறி எமது வருமானத்தை சிகிச்சைக்கு செலவு செய்கின்றோம்.

### வடக்கின் தொழிற்துறை வளர்ச்சி

வடக்கை பொறுத்தவரை தொழிற்துறை வளர்ச்சியானது மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. நீண்ட கால நோக்கில் குறிப்பிட்ட ஒரு துறையை தெரிவு செய்து அதற்கான உட்கட்டுமானங்களை கட்டமைத்து வளர்ப்பதற்கு ஏதுவாக தெங்கு சார் பொருளாதாரம் காணப்படுகிறது. காரணம் அது விவசாயத்திற்கூடான உள்ளூர் மூலப்பொருட்களை அடிப்படையாக கொண்டதாகும். தேங்காயை முழுமையாக பயன்படுத்தினால் கணிசமான இலாபம் அடையலாம். உதாரணமாக தேங்காய் சொட்டை கொண்டு எண்ணெய், பால், சீனி மற்றும் பல உற்பத்திகளைச் செய்யலாம். அதன் இளநீரையும் விற்பனை செய்யலாம்.

அத்துடன் தேங்காய் சிரட்டை மற்றும் மட்டை போன்றவற்றையும் முடிவுப்பொருளாக மாற்றம் செய்யலாம். குறிப்பாக சிரட்டை கரி மூலம் உருவாக்கப்படும் activated carbon ஆனது அழகுசாதனப் பொருட்கள் மற்றும் பற்பசை உற்பத்திகளிற்கு உள்ளீடுகளாக பயன்படுத்தபடுகிறது. அது போன்றே தேங்காய் மட்டை சார் உற்பத்திகள் பச்சைவீடு போன்ற விவசாய தேவைக்காகவும் சர்வதேச அளவில் நல்ல கேள்வி உள்ளது.

தென்னை வளர்ப்பு சபையானது வட மாகாணத்தில் தென்னை முக்கோண வலயம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது வட மாகணத்திற்கு கிடைத்த ஒரு பெரும் வெற்றியாக கருதலாம் ஏனெனில் தற்போது தென்னை முக்கோண வலயமாக கருதப்படும் கம்பஹா, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களை அண்மித்தே இலங்கையின் தெங்கு சார் உற்பத்திகளின் பொருளாதாரம் மற்றும் தொழிற்துறை வளர்ந்துள்ளதுடன் பெருமளவான மக்கள் இத்துறையினை தமது வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். எனவே நாம் எமது தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பல்வேறு நன்மைகளை அடையலாம்.

| மாவட்டம் | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | கம்பஹா | குருநாகல் | புத்தளம் |
|---|---|---|---|---|---|
| நிலப்பரப்பு (ஏக்கர்) | 253,175 | 315,913 | 342,589 | 1,189,552 | 758,754 |
| பயிர்செய்கை நிலம் | 19,700 | 17,414 | 133,552 | 419,274 | 186,054 |
| வீதம் | 7.78% | 5.51% | 38.98% | 35.24% | 24.52% |
| மக்கள் தொகை | 585,000 | 112,875 | 2,294,641 | 1,610,299 | 760,778 |
| வருட உற்பத்தி | 100 Mn | 89 Mn | 854 Mn | 2,683 Mn | 1,190 Mn |
| வீட்டு தேவை கேள்வி | 67 Mn | 13 Mn | 266 Mn | 186 Mn | 88 Mn |
| மிகை உற்பத்தி | 33 Mn | 76 Mn | 588 Mn | 2,496 Mn | 1,102 Mn |

இந்த அட்டவணைக்கமைவாக வடமாகாணத்தின் ஏனைய மூன்று மாவட்டங்களின் தரவுகள் கிடைக்க வில்லை.

இதற்கூடாக முன்வைக்க விரும்புவது யாதெனில் வடமாகாணத்தின் நிலப்பரப்பும் குறித்த தென்னை வலய மாவட்டங்கள் மூன்றினதும் நிலப்பரப்பும் ஏறக்குறைய ஒரே அளவிலேயே காணப்படுகிறது. எனவே வட மாகாணத்திலும் காணப்படும் தென்னை செய்கைக்கு பொருத்தமான காணிகளை இணங்கண்டு தென்னை பயிர்செய்கையை ஊக்குவிக்கும் சந்தர்ப்பத்தில் வட மாகாணத்திலும் தென்னை சார் உற்பத்திக்கூடாக கிராமப்புர பொருளாதாரத்தை கட்டியெழுப்பலாம்.

### கூட்டுறவின் பங்களிப்பு

இந்த விடையங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு வடக்கின் அபிவிருத்தியில் கரிசனை உள்ளவர்களின் ஆலேசனைக்கமைய 2018ம் ஆண்டு "வடக்கிற்கான 50 கைத்தொழிற்சாலைகள்" எனும் திட்டத்திற்கூடாக 5 தேங்காய் எண்ணெய் ஆலைகள் கூட்டுறவு துறைக்குள் உருவாக்கப்பட்டது. மக்களிடம் தேங்காய் எண்ணெய் தொடர்பில் போதிய விழிப்புணர்வு ஆரம்பத்தில் இருக்கவில்லை. இதனால் இவ்வாலைகள் இயங்குவதில் பாரிய சிக்கலை சந்தித்து வந்தன.

**க. சுதர்சன்**

இருப்பினும் தற்போது நாட்டில் தேங்காய் எண்ணெயில் காணப்படும் புற்றுநோயை ஏற்படுத்த கூடிய மூலக்கூறுகள் தொடர்பில் ஏற்பட்ட விழிப்பணர்வை அடுத்து மக்களிடம் சுத்தமான தேங்காய் எண்ணெய்க்கான கேள்வி அதிகரித்துள்ளது. பாம் ஒயில் இறக்குமதி; தடைசெய்யப்பட்டுள்ளதால் தேங்காய் எண்ணெயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. அத்துடன் சந்தையில் காணப்பட்ட தரமற்ற எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களையும் தடை செய்துள்ளன. இச்சூழ்நிலையில் கூட்டுறவு துறையானது தனது முதன்மை நோக்கமான மக்கள் சேவையை செய்வதற்காக தமது உற்பத்திக்கு தேவையான தேங்காயை உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்ய ஆர்வமாக உள்ளது.

அரச திட்டத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற 5 தேங்காய் எண்ணெய் ஆலைகளுடன் கூட்டுறவு அபிவிருத்தி வங்கி மற்றும் அதனுடன் இணைந்து பணியாற்றும் டெக் சிலோன் அமைப்பு மேலும் 3 தேங்காய் எண்ணெய் ஆலைகளின் கட்டுமானப்பணிகளை ஆரம்பித்துள்ளது. இவை வெற்றிகரமாக இயங்கும் பட்சத்தில் குறிப்பிட்ட அளவு வேலை வாய்ப்பினை குறித்த பிரதேசத்தில் உருவாக்குவதுடன் அப்பிரதேச மக்களிற்கு கலப்படமற்ற தேங்காய் எண்ணெயை வழங்ககூடியதாக இருக்கும். அத்துடன் சிரட்டை மற்றும் மட்டை சார்ந்த உற்பத்திகளையும் படிப்படியாக கட்டியெழுப்புவதனால் மேலதிக வருமானங்களையும் எமது மாகணத்திற்கு கொண்டுவர முடியும். இது அனைத்திற்கும் அடிப்படை யாதெனில் கூட்டு றவு துறையினரும் மக்களும் தமது சமூக பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும். அதாவது எமது உள்ளூர் உற்பத்தி தேவைக்கான தேங்காய்களை கூட்டுறவிற்கு வழங்க விவசாயிகள் முன்வருவதுடன் மக்களும் உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்ய முன்வரவேண்டும். அத்துடன் கூட்டுறவும் தரமான உற்பத்திகளை செய்து நியாயமான விலையில் மக்களிற்கு வழங்க வேண்டும்.

கூட்டுறவுப் பயணம் - இந்த குறிப்புகள் கூட்டுறவு இயக்கத்தின் வரலாறு, அதன் சமகால சவால்கள் மற்றும் எதிர்கால சாத்தியப்பாடுகளை பதிவுசெய்யும்.

**கட்டுரையாளர்: அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி**

# வட கொரியாவின் கிம் ஜோங் உன் உடல் நிலையில் திடீர் பாதிப்பா?



அலிஸ்டார் கோல்மன்

அண்மையில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் காணொலி ஒன்று வடகொரிய அரசுத் தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. அதில் அவர் உடல் மெலிந்து காணப்பட்டதால் அந்நாட்டு மக்கள் கவலையடைந்துள்ளனர்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் உடல் நிலை குறித்த விவரங்கள் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கும். பொதுவெளியில் அதுபற்றி விவாதிக்கப்படுவது இல்லை.

தொலைக்காட்சியில் காட்டப்பட்ட காணொலியில் சமீபத்திய ஆண்டுகளில் இருந்ததைவிட கிம் ஜோங் உன் உடல் மெலிந்திருந்தார்.

கிம் ஜோங் உன் உடல்நிலை குறித்து கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு வதந்திகள் உலா வந்துகொண்டே இருக்கின்றன. ஆனால், வடகொரியாவின் அரசாங்க நடைமுறைகள் மிகவும் இரகசியமானவை. இதுவரை கிம் ஜாங் உன்னின் உடல்நிலை குறித்த எந்தத் தகவலையும் அரசு உறுதி செய்யவில்லை.

**வடகொரியா மக்கள் கண்டது என்ன?**

வடகொரியாவின் முக்கியத் தொலைக்காட்சியில் இரண்டு காணொலிகள் காட்டப்பட்டன. அந்தத் தொலைக்காட்சியின் பெயர் சென்ட்ரல் ரெலிவிஷன். அந்தக் காணொலிகள்தான் கிம் ஜோங் உன்னின் உடல்நிலை குறித்த கவலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன

இசை நிகழ்ச்சிக்கு கிம் ஜோங் உன் வருவதைக் காட்டுகிறது ஒரு காணொலி. அதில் கிம் ஜோங் உன் மிகவும் எடை குறைந்து மெலிந்து காணப்படுகிறார்.

இரண்டாவது காணொலி வழக்கத்துக்கு மாறானது. அதில் தோன்றும் வடகொரியாவைச் சேர்ந்த ஒருவர், "அவரை (கிம் ஜோங் உன்) இப்படிக் கண்டதால் நாங்கள் அனைவரும் கவலையடைந்துள்ளோம்" என்கிறார்.

அனைவரும் அழத் தொடங்கிவிட்டோம்" என்று அவர் மேலும் கூறுகிறார்.

முன்னதாக நாட்டின் தொழிலாளர் கட்சி கூட்டத்தில் கிம் ஜோங் உன் பங்கேற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களிலேயே அவர் உடல் எடை குறைந்திருப்பது ஓரளவு தெரிந்தது.

இந்தக் காணொலிகள், புகைப்படங்கள் குறித்து தென்கொரியாவில் இருந்து இயங்கும் என்.கே.நியூஸ் இணைய இதழ் ஆய்வு செய்திருக்கிறது.

> “
> **கிம் ஜோங் உன்னின் தங்கை கிம் யோ-ஜோங் அடிக்கடி ஊடகங்களில் தென்படுகிறார். ஆனால், ஒரு பெண்ணை வடகொரியா தலைவராக ஏற்குமா என்ன சந்தேகம் தொடர்ச்சியாக இருந்து வருகிறது. ஒருவேளை கிம் யோ-ஜோங் பொருத்தமற்றவர் என்று கருதப்பட்டால், அதிகாரம் முதல் முறையாக கிம் குடும்பத்துக்கு வெளியே சென்றுவிடும்.**

முன்னைவிட கிம் ஜோங் உன்னின் கைக்கடிகாரம் மிகவும் இறுக்கமாகக் கட்டப்பட்டிருப்பதால் அவர் எடை குறைந்திருக்கிறார் என்பது உறுதியாகிறது என அந்த இதழ் கூறுகிறது.

கிம் ஜாங் உன்னின் உடல் எடைகுறைந்த காணொலி வெளியிடப்பட்டது தற்செயலானது என்றாலும், அது குறித்து கவலை தெரிவிக்கும் ஒருவரின் காணொலி வெளியிடப்பட்டது ஏன் என்பது தெரியவில்லை.

வடகொரிய விவகாரங்களை ஆய்வு செய்யும் ஒன் கொரியா சென்டர் என்ற அமைப்பின் தலைவரான க்வாக் கில் சோப், இதற்கு வேறு மாதிரியான விளக்கத்தைத் தருகிறார்.

வடகொரியா ஒருபோதும் கிம் ஜோங் உன்னுக்கு எதிர்மறையான செய்திகளை வெளியிடாது. இப்போது அவர் உடல் மெலிந்த காட்சிகளை வெளியிடுகிறது என்றால், அவராகவே உடல் எடையைக் குறைத்துள்ளார் என்று காட்டுவதற்காகத்தான் என்கிறார் சோப்.

மக்களுக்காகவே இரவு - பகல் பாராது உழைத்து உடல் மெலிந்து போயிருக்கிறார் என்ற வகையிலான பரப்புரைக்காகவே கிம் ஜோங் உன்னின் காணொலி பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் சோப் கூறுகிறார்.

**இது ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?**

வடகொரியாவைப் பொறுத்தவரை கிம் ஜோங் உன்னின் உடல் நிலை மிகவும் அதிக கவனத்தைப் பெறும் அம்சமாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறது.

2011-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தந்தை கிம் ஜோங் இல் இறந்த பிறகு அதிபர் பொறுப்பை கிம் ஜோங் உன் ஏற்றுக் கொண்டார். அதன் பிறகு கிம் ஜோங் உன்னின் உடல் எடை படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது.

கிம் ஜோங் உன், கிம் அதிகாரப் பரம்பரையில் மூன்றாவது தலைமுறை. 'பீக்து சிகரத்தின் உன்னத மனிதர்கள்' என்று இவர்கள் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். ஜப்பானுக்கு எதிராகக் கெரில்லா போரைத் தொடங்கிய மலைப்பகுதியின் பெயர் இது.

கிம் ஜோங் உன்னுக்குப் பிறகு வடகொரியாவை யார் ஆட்சி செய்வார்கள் என்ற கேள்விக்கு இதுவரை தெளிவான விடை இல்லை. அவரின் மரணமோ, நீண்ட கால உடல் முடக்கமோ நாட்டில் அதிகார வெற்றிடத்தை ஏற்படுத்திவிடும். அது கிழக்கு ஆசியாவில் மற்றொரு நிலையற்ற தன்மைக்குக் காரணமாக அமையக்கூடும்.

கிம் ஜோங் உன்னின் தங்கை கிம் யோ-ஜோங் அடிக்கடி ஊடகங்களில் தென்படுகிறார். ஆனால், ஒரு பெண்ணை வடகொரியா தலைவராக ஏற்குமா என்ன சந்தேகம் தொடர்ச்சியாக இருந்து வருகிறது. ஒருவேளை கிம் யோ-ஜோங் பொருத்தமற்றவர் என்று கருதப்பட்டால், அதிகாரம் முதல் முறையாக கிம் குடும்பத்துக்கு வெளியே சென்றுவிடும்.

**இதற்கு முன்னதாக உடல்நிலை மோசமாக இருந்திருக்கிறதா?**

2014-ஆம் ஆண்டு ஊடக வெளியில் இருந்து 40 நாள்கள் காணாமல் போய்விட்டார் கிம் ஜோங் உன். அப்போது அவரது உடல்நலம் குன்றியிருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம் என்று வதந்தி பரவியது. பின்னர் அவர் ஊன்றுகோலின் உதவியுடன் நடக்கும் காட்சி வெளியானபோது, அவருக்கு மூட்டில் அறுவைச் சிகிச்சை நடந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் முடிவுக்கு வந்தனர்.

இதுபோன்று பலமுறை கிம் ஜோங் உன் காணாமல் போயிருக்கிறார். ஒவ்வொரு முறையும் அது மருத்துவக் காரணங்களுக்காகவே இருக்கும் என அண்டை நாடான தென்கொரியா முடிவு செய்திருக்கிறது.

2020ஆம் ஆண்டு அப்படியொரு சம்பவம் நடந்தது. காணாமல் போயிருந்த கிம் ஜோங் உன், தனது மணிக்கட்டில் சில தழும்புகளோடு தோன்றினார். அது மருத்துவச் சிகிச்சைகளால் ஏற்பட்டது எனக் கருதப்பட்டது.

கிம் ஜோங் உன்னுக்கு 37 வயதாகிறது. அதிகமாகப் புகைப்பிடிக்கக் கூடியவர். மது குடிப்பதிலும் அப்படியே.

அவரின் உடல் எடை தொடர்ந்து அதிகரித்து வந்ததால் அவருக்கு நீரிழிவு அல்லது முடக்குவாதம் போன்ற நோய்கள் அவருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்து எழுந்தது. ஆனால், அவரின் உடல்நிலை பற்றி அரசு ஊடகத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அதை உறுதி செய்யவும் முடியாது.

- பி.பி.சி.

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 8 வினாத்தாள் I


நேரம் - 45 நிமிடம்

ஆசிரியர் - மு.வே.அன்பழகன்

கல்வி TV CHANNEL

* ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப்பிழை மட்டும் இருப்பின் ஒரு புள்ளி வழங்குக. அதற்கு மேல் எழுத்துப்பிழை எனின் புள்ளி வழங்க வேண்டாம். (6 புள்ளி)

17) இருபத்து மூவாயிரத்து நானூற்றுப் பதினொன்று
18) 594
19) i. XX
ii. xix
20) i. 18
ii. 81
21) i. 6
ii.



27) 102
28) 28cm
29) i. 11
ii. 2
30) 1m 30cm / 130 cm

(30 புள்ளி)

* 24 ஆம் வினாவிற்கு 4 புள்ளிகள். ஏனையவற்றிற்கு 2 புள்ளிகள்

22) i. ரூபாய் 270.00 / 270 ரூபாய்
ii. ரூபாய் 90.00 / 90 ரூபாய்
23) i. 14:30 மணித்தியாலம்
ii. 00:00 மணித்தியாலம்
24) i. 51.00
ii. 5
iii. 36.00
மொத்தம் 127.00
25) i. 382 km
ii. 257 km
26) i. 30
ii. 50 இற்கு மட்டம் இட்டு வரைந்து நிழற்றியிருந்தால் புள்ளி வழங்குக.


| | | |
|---|---|---|
| 31) 1 | 46) 4 | |
| 32) 2 | 47) 2 | |
| 33) 4 | 48) 3 | |
| 34) 3 | 49) 1 | |
| 35) 4 | 50) 3 | |
| 36) 1 | 51) 3 | |
| 37) 1 | 52) 3 | |
| 38) 4 | 53) 3 | |
| 39) 3 | 54) 4 | |
| 40) 4 | 55) 3 | |
| 41) 3 | 56) 3 | |
| 42) 2 | 57) 2 | |
| 43) 1 | 58) 4 | |
| 44) 3 | 59) 2 | |
| 45) 3 | 60) 1 | |

(30x1 = 30 புள்ளி)

* முழுவிடைத்தாளையும் கவனத்திற்கொண்டு கையெழுத்து, இலக்கங்கள் போன்றவை தெளிவாகவும், சரியாகவும் எழுதப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் வழங்குக.


* வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

01.



1 2 3


02.



1 2 3

* 03ஆம், 04ஆம் வினாக்களுக்குச் சமனான உருக்கள் இரண்டினைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

03.



A B C D

1. Aயும் Cயும் 2. Bயும் Dயும் 3. Bயும் Cயும்


04.



A B C D

1. Aயும் Bயும் 2. Bயும் Cயும் 3. Cயும் Dயும்

05.




A B C

* ABC உருவங்களில் காணப்படும் பொருட்கள் மற்றும் தொடர்புகளுக்கு மிகவும் பொருத்தமான விடை எது?

1. உலோகங்கள் 2. வீட்டு உபகரணங்கள் 3. பெண்கள்

06.



1 2 3 4 5

1, 2, 3, 4, 5 உருக்களுடன் மிகவும் பொருத்தமானது

1. உடைகள் 2. ஆடை ஆபரணங்கள் 3. துணிமணி

# கம்மன்பிலவுக்காக பங்காளிகள் ஓரணியில் பஸில் அணியினர் இதுவரைக்கும் மௌனம்

கொழும்பு, ஜூன் 30

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு ஓரணியில் திரள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, தேசிய காங்கிரஸ் ஆகியன அமைச்சர் கம்மன்பிலவுக்கு ஏற்கனவே நேசக்கரம் நீட்டியுள்ள நிலையில், தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இதன்படி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க அக்கட்சியின் உயர்மட்டக் குழு தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் ஆளுங்கட்சியின் உயர்மட்டப் பிரமுகர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர். பஸில் ஆதரவு அணி உறுப்பினர்களின் நிலைப்பாடு இன்னும் வெளியாகவில்லை.

அதேவேளை, எரிபொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பான தீர்மானத்தை அரசு மீளப்பெற்றால், நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி வாபஸ் பெறும் என அக்கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"எரிபொருட்களின் விலை அதிகரிப்பை மீளப்பெறுதல் அல்லது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதல் ஆகியவற்றை இலக்காக வைத்தே நம்பிக்கையில்லாப் பிரேரணையை எமது கட்சி கொண்டுவந்தது. எனவே, இது நடந்தால் பிரேரணையை மீளப்பெறுவதில் சிக்கல் இல்லை" என்று அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.



எரிபொருட்களின் விலை உயர்வு திட்டம் மீளப்பெறப்படாத பட்சத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை வருவது உறுதி எனவும் அவர் கூறினார். (இ)

# மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பயணிகள் இலங்கை வர தடை!

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

**கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றில் இருந்து வரும் பயணிகளுக்குத் தற்காலிக தடை விதிக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை தீர்மானித்துள்ளது.**

இதன்படி ஜூலை முதலாம் திகதி முதல் 13ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும் வகையில் கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், சவூதி அரேபியா, ஓமான், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் இருந்து பயணிகள் இலங்கை வருவதற்குத் தடை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 நாட்களுக்கு குறித்த நாடுகளில் தங்கியிருந்தவர்கள் இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.




எவ்வாறாயினும் வேறு நாடுகளில் இருந்து குறித்த நாடுகளின் ஊடாக இலங்கை வரும் பயணிகளுக்கு இந்தத் தடை பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முதலாம் திகதி முதல் தென் ஆபிரிக்க நாடுகள் உள்ளிட்ட மேலும் 8 நாடுகளில் இருந்து பயணிகள் இலங்கை வருவதற்குத் தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ)



# சஜித் அணியில் சங்காவுக்கு பிரதித் தலைவர் பதவியா?

## அவரே அடியோடு மறுப்பு

கொழும்பு, ஜூன் 30

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் குமார் சங்ககாரவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது என வெளியாகியுள்ள தகவல்களை குமார் சங்ககார அடியோடு மறுத்துள்ளார்.

"நான் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துவிட்டேன் எனவும், பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது எனவும் வெளியாகியுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை" என்று குமார் சங்ககார தெரிவித்துள்ளார். (இ)

# நெல்லியடியில் மேலும் 4 பொலிஸார் கொரோனா தொற்றுடன் அடையாளம்

வடமராட்சி, ஜூன் 30

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 34 உத்தியோகத்தர்களிடம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மேலும் நால்வருக்குக் கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குச் சென்று பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கியிருந்தார்.

அவற்றில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பொறுப்பதிகாருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதனால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 34 உத்தியோகத்தர்களிடம் நேற்றுமுன்தினம் அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.




அதில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இ - 02)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 455 பேர் கைது



கொழும்பு, ஜூன் 30

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச் சாட்டில் மேலும் 455 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச் சாட்டில் இதுவரை 45 ஆயிரத்து 99 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)



## 22 இலட்சம் ரூபாய் பெறுமதியான

# போதைப்பொருட்களுடன் ஒருவர் வசமாக சிக்கினார்

கொழும்பு, ஜூன் 30

ஹொரணை - போருவதண்ட பகுதியில் 22 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்கள் அடங்கிய செயற்கை முத்திரைகள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கை வான்படை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் அருண ஜயசுந்தரவின் ஆலோசனையின் பேரில் இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, 37 வயதுடைய சந்தேகத்துக்குரிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவர் மேலதிக விசாரணைகளுக்காக ஹொரணைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ)



# லண்டனில் பெரும் தீ விபத்து: வணிக வளாகங்கள் நாசம்!

## ஆறு பேர் காயம்

லண்டன், ஜூன் 30

லண்டன் மாநகரின் தெற்கு பகுதியின் ரயில் நிலையம் அருகே நுழைவு வளைவுகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெரும் தீ விபத்தில் சிக்கி 6 பேர் காயமடைந்தனர். அத்துடன், 3 வணிக வளாகங்கள், 6 கார்கள் என்பன முற்றாக எரிந்து நாசமாகின.

லண்டனின் தென்கிழக்கு பகுதியான நியூவிங்டன் என்ற இடத்தில் அமைந்துள்ள எலிபண்ட் அன்ட் காசல் ரயில் நிலையம் அருகே ஏற்பட்ட பயங்கர தீ விபத்தை அடுத்து அந்தப் பகுதி பெரும் புகை மண்டலமாகக் காணப்பட்டது.

சம்பவ இடத்திற்கு 15 தீயணைப்பு வாகனங்களுடன் விரைந்த 100இற்கும் மேற்பட்ட தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் கடுமையாகப் போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் குறித்து தகவல் வெளியாகவில்லை. விசாரணை நடைபெற்று வருகிறது. (ஐ)

# இனவெறி கட்டமைப்பை அகற்றுவதற்கு ஐ.நா. மனித உரிமை பேரவை அழைப்பு!

## மன்னிப்பு, இழப்பீடுகள் வழங்கவும் வலியுறுத்து

ஜெனிவா, ஜூன் 30

ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் ஆபிரிக்க வம்சாவளியினருக்கு எதிராக அடிமைத்தனம், காலனித்துவம், பாகுபாடு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட கட்டமைப்புக்களை அகற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் மிற்செல் பச்லெட் அம்மையார் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், கல்வி சீர்திருத்தம், பாகுபாடுகள் நிவர்த்தி செய்யப்படுவதுடன் முன்னையவற்றை நிவர்த்தி செய்யும்விதமாக மன்னிப்பும் கேட்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மிற்செல் பச்லெட் அம்மையார் 23 பக்கங்கள் கொண்ட அறிக்கையை திங்கட்கிழமை பேரவையில் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கை, அமெரிக்காவில் வெள்ளையின பொலிஸாரால் ஜோர்ஜ் பிலொய்ட் என்ற ஆபிரிக்க வம்சாவளி நபர் கொல்லப்பட்ட பின்னர் தயாரிக்கப்பட்டது. இது ஆபிரிக்க வம்சாவளியினருக்கு எதிரான இனப்பாகுபாடு தொடர்பில் 300 நிபுணர்களால் ஆபிரிக்க வம்சாவளியினருடன் உரையாடிய பின் தயாரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின்படி இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ், கனடா, பிரேஸில், கொலம்பியா உள்ளிட்ட சுமார் 60 நாடுகளில் கட்டமைக்கப்பட்ட இனப்பாகு சட்டங்கள் காணப்படுகின்றன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளில் 250இற்கும் மேற்பட்ட ஆபிரிக்கர்கள் இனப்பாகுபாடு காரணமாக கொல்லப்பட்டனர்.




இவர்களில் 190பேர் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளின் பிடியிலிருந்தபோது மரணமாகினர் என்று கூறப்படுகின்றது.

மேலும், ஐரோப்பா, அமெரிக்காவில் ஆபிரிக்க வம்சாவளியினர் வறுமையில் வாடுகின்றனர். கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, அரசியல் பங்கேற்பு பிற அடிப்படை மனித உரிமைகளை பெறுவதில் அவர்கள் கடும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த நாடுகளில் அடிமைத்தனம் காலனித்துவம், பாகுபாடு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட கட்டமைப்புக்கள் மற்றும் அமைப்புகள் அகற்றப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவற்றுக்கு நிவர்த்தியாக அந்த நாடுகளின் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். அத்துடன், முன்னர் நடந்தவற்றுக்காக மன்னிப்பு கோரப்பட வேண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)



# தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதிக்கு 15 மாத சிறை

ஜொகன்னர்ஸ்பேர்க்,ஜூன் 30

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஷூமாவுக்கு 15 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து நேற்று செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது அந்த நாட்டின் அரசமைப்பு நீதிமன்றம்.

2018ஆம் ஆண்டு வரை 9 ஆண்டுகள் பதவியிலிருந்த ஷூமா அரச சொத்துக்களை ஊழல் செய்ய அனுமதித்த வழக்குகளில் குற்றவாளியாகக் காணப்பட்டார். இதில், அவருக்கு இரு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. எனினும், 2019ஆம் ஆண்டு அவர் அனைத்துக் குற்றங்களில் இருந்தும் விடுவிக்கப் பட்டார்.

இந்த நிலையில், ஷூமா பதவியில் இருந்தபோது விசாரணைக்காக முன்னிலையாக வேண்டும் என்ற உயர் நீதிமன்ற உத்தரவை மீறிய வழக்கில் அரசமைப்பு நீதிமன்றம் இப்போது அவரை குற்றவாளியாக அறிவித்தது. இந்த வழக்கில் அவருக்கு நேற்றைய தினம் 15 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும், ஷூமா கைது செய்யப்படுவாரா என்பது தொடர்பில் தெளிவான விளக்கங்கள் வெளியாகவில்லை.

# ஒரு பெண் பல கணவர்களை மணக்கும் சட்டத்திற்கு தென்னாபிரிக்கா அனுமதி!

## வலுக்கும் எதிர்ப்புக்கள்!

கேப்டவுன், ஜூன் 30

ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை திருமணம் செய்ய அனுமதிக்கும் தென்னாபிரிக்க நாட்டின் 'பாலிண்ட்ரி' சட்டம் தொடர்பில் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

தென்னாபிரிக்கா நாட்டில் தாராளவாத அரசமைப்பு முறைமைகள் உள்ளன. அங்கு ஒரே பாலின திருமணத்துக்கும், ஆண்கள் பலதார திருமணம் செய்யவும் அனுமதி உண்டு. இந்த நிலையில் பாலின உரிமைகள் ஆர்வலர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை திருமணம் செய்ய அனுமதி கோரினர்.

இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பாலிண்ட்ரி திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. அரசின் இந்த முயற்சிக்கு பழமை வாத, மற்றும் மதக் குழுக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

பாலிண்ட்ரி திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்ப்புகள் அதிகரித்துள்ளன. (ஐ)

# இங்கிலாந்து தளபதி தொற்றால் பாதிப்பு!



லண்டன், ஜூன் 30

இங்கிலாந்து படைகளின் தலைமை தளபதி ஜெனரல் சேர் நிக் கார்ட்டர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அவருடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணிய பாதுகாப்பு செயலாளர் மற்றும் மிக மூத்த இராணுவ தளபதிகள் ஆறு பேர் சுயதனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

வழக்கமான கோவிட் 19 பரிசோதனையின்போது ஜெனரல் சேர் நிக் கார்ட்டருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# கலிபோர்னியாவில் மீண்டும் காட்டு தீ!

சன்பிரான்சிஸ்கோ,ஜூன் 30

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் - சான் பெர்னாண்டினோ கவுண்டி வனப் பகுதியில் பெரும் காட்டு தீ பற்றி எரிந்து வருகிறது.

கலிபோர்னியா மாநிலத்தில் கடந்த சில வாரங்களாக வெப்ப நிலை கடுமையாக அதிகரித்துள்ளது. கடும் வறட்சியால் அங்கு அதிக அளவில் காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

சில வாரங்களுக்கு முன் பெரும் காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டு அணைக்கப்பட்ட நிலையில், சான் பெர்னாண்டினோ கவுண்டி வனப் பகுதியில் மீண்டும் பெரும் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

வறண்ட வானிலை வேகமான காற்று காரணமாக மளமளவென காட்டுத் தீ வேமாகப் பரவி வருகிறது. இதையடுத்து அமெரிக்க வனப்பாதுகாப்பு குழுவினரும் சான் பெர்னாண்டினோ நகர தீயணைப்பு வீரர்களும் இணைந்து தீயை கட்டுப்படுத்த போராடி வருகின்றனர்.

பெரும் போராட்டத்திற்கு பிறகு காட்டுத் தீ பிற இடங்களுக்கு பரவாமல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் தீ முற்றிலுமாக அணைக்கப்படவில்லை.

காட்டு தீ கட்டுக்குள் வரவில்லை என்றால் ஹெலிகொப்டர்கள் மூலம் வான் வழியே தண்ணீரை பீய்ச்சி அடித்து நெருப்பை அணைக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

கலிபோர்னியாவில் வருடந்தோறும் வெப்ப காலங்களில் காட்டுத் தீ பற்றி எரிவது வழமையான சம்பவமாகத் தொடர்ந்து வருகிறது.

கடந்த 2020ஆம் ஆண்டில் ஏற்பட்ட காட்டுத் தீயால் 43 இலட்சத்துக்கும் அதிகமான ஏக்கர் காடுகள் எரிந்து அழிந்தன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் கட்டடங்கள் முழுமையாக தீக்கிரையாகின. (ஐ)

# யூரோ கிண்ண உதைபந்தாட்டம்: சுவிஸிடம் தோற்றது பிரான்ஸ்!

புகாரெஸ்ட், ஜூன் 30

உலக சம்பியனான பிரான்ஸ் அணி சுவிற்சர்லாந்திடம் 5 - 4 என்ற கோல் கணக்கில் தோற்று யூரோ கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியது.

யூரோ கிண்ணம் என்றழைக்கப்படும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட தொடர் தற்போது நடக்கிறது. நேற்றிரவு ருமேனியாவின் தலைநகர் புகாரெஸ்டில் நடந்த 16 அணிகள் சுற்றுப் போட்டியில் பிரான்ஸ் - சுவிற்சர்லாந்து அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

ஆரம்பம் முதலே சமபலத்துடன் இந்த அணிகள் மோதின. 15ஆவது நிமிடத்தில் ஹரிஸ் செபரோவிக் சுவிற்சர்லாந்து அணிக்காக கோல் அடித்து அசத்தினார். முதல் பாதி ஆட்டம் முடிந்தபோது 1 -0 என்ற கோல் கணக்கில் சுவிற்சர்லாந்து முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில், பிரான்ஸ் எழுச்சி பெற்றது. கரீம் பென்செமா 57, 59ஆவது நிமிடங்களில் கோல்களை அடித்தார். தொடர்ந்து 75ஆவது நிமிடத்தில் போல் போக்பா கோல் அடிக்கவே பிரான்ஸ் முன்னிலை பெற்றது.



ஆனால், சுவிற்சர்லாந்தின் செபரோவிக் 81ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். போட்டி முடிவடையவிருந்த இறுதித் தருணத்தில் 90ஆவது நிமிடத்தில் சுவிற்சர்லாந்தின் மரியோ கவ்ரனோவிக் கோல் அடிக்கவே விறுப்பாக நகர்ந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதைத் தொடர்ந்து சமநிலை தவிர்ப்பு உதை (பெனால்டி) வழங்கப்பட்டது. இதில், சுவிற்சர்லாந்து 5 - 4 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இந்த ஆண்டு தொடரின் 16 அணிகள் சுற்றில் சமநிலை தவிர்ப்பு உதை வரை போட்டி நீண்டது இதுவே முதன்முறையாகும்.



கோபா அமெரிக்க தொடர்!

## பிரேஸிலுடனான போட்டி சமன்: ஈக்குவடோர் அணி காலிறுதியில்!

பிரேஸிலியா, ஜூன் 30

கோபா அமெரிக்கா உதைபந்தாட்ட தொடரில் பிரேஸிலுக்கு எதிரான ஆட்டத்தை 1-1 என்ற கோல் கணக்கில் சமன் செய்த ஈக்குவடோர் அணி காலிறுதிக்கு முன்னேறியது.

தென்னமெரிக்க நாடுகளிடையேயான கோபா அமெரிக்க தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பிரேஸில் - ஈக்குவடோர் அணிகள் மோதின.

பிரேஸில் ஏற்கனவே காலிறுதி தொடருக்கு முன்னேறி விட்டமையால் நெய்மர், டியாகோ சில்வா, கேப்ரியல் ஜீசஸ் போன்ற முக்கிய வீரர்களுக்கு இந்தப் போட்டியில் ஓய்வளிக்கப்பட்டது.

இளம்வீரர்களை களமிறக்கியமை ஈக்குவடோருக்கு சாத்தியமாகவே, தொடர்ச்சியாக 10 போட்டிகளில் வென்ற பிரேஸில் அணிக்கு ஈக்குவடோர் முற்றுப்புள்ளி வைத்தது.

போட்டியின் 37ஆவது நிமிடத்தில் எடர் மிலிராயோ பிரேஸில் அணிக்காக கோல் அடித்தார்.

பதிலுக்கு 53ஆவது நிமிடத்தில் ஈக்குவடோருக்கு கிடைத்த கோர்ணர் வாய்ப்பை பயன்படுத்தி ஏஞ்சல் மெனா கோல் அடித்தார்.

போட்டி முடிவடையும் வரை இரு அணிகளின் வீரர்களும் வேறு கோல் அடிக்காதமையால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)




## ரி-20 உலகக்கிண்ண தொடர்: எமிரேட்ஸ், ஓமான் நாடுகளில்!

அறிவித்தது ஐ.சி.சி.

டுபாய், ஜூன் 30

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான் நாடுகளில் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் நடைபெறும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் ஒக்ரோபர் - நவம்பர் காலப் பகுதியில் இந்தியாவில் நடைபெறவிருந்தது. அங்கு தீவிரமாகப் பரவி வரும் கொரோனா தொற்று அச்சுறுத்தலால் இந்தத் தொடர் இடம் மாற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 14ஆம் திகதி வரை உலகக் கிண்ணத் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஓமான் நாடுகளில் நடக்கும் என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இலங்கை, பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, நமீபியா, ஓமான், பப்புவாநியூகினி என 8 நாடுகள் முதல் சுற்று போட்டியில் விளையாடவுள்ளன. இரு பிரிவுகளாக நடக்கும் இந்த சுற்றில் முதல் இரு பிரிவுகளை பிடிக்கும் 4 அணிகள் சுப்பர் 12 சுற்றுக்கு தகுதி பெறும்.

போட்டி அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபை விரைவில் வெளியிடவுள்ளது. (ஐ)

## விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் ஜொகோவிக், சபலென்கா வெற்றி



லண்டன், ஜூன் 30

விம்பிள்டன் ரென்னிஸ் முதல் சுற்றில் சேர்பிய வீரர் ஜொகோவிக், பெலாரஸ் வீராங்கனை சபலென்கா ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் நேற்று முன்தினம் இங்கிலாந்தில் ஆரம்பமானது.

முதல் சுற்றில் உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் ஜொகோவிக் தரவரிசையில் 253ஆவது இடத்தில் இருக்கும் பிரிட்டனின் கிராபரை சந்தித்தார்.

முதல் செற்றை 6 - 4 என்ற செற் கணக்கில் வென்று கிராபர் அதிர்ச்சி கொடுத்தார். எனினும் சுதாகரித்த ஜொகோவிக் 6 - 1, 6 - 2 என்ற செறகளில் அடுத்த இரு செற்களையும் வென்றார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு போட்டியில் பெலாரஸின் சபலென்கா ருமேனியாவின் நிக்கோலஸை எதிர்கொண்டார்.

6 - 1, 6 - 4 என்ற செற் கணக்கில் இலகுவாக வென்ற சபலென்காக இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

முதல் சுற்றில் முக்கிய வீரர்களான ஸ்பெயினின் முகுருஜா, அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்ரீபன்ஸ், மடிசன் கெய்ஸ், ரஷ்யாவின் அலெக்சாண்ட்ரோவா ஆகியோர் வெற்றி பெற்றனர். (ஐ)

## யூரோ கிண்ண உதைபந்து ஸ்பெயின் காலிறுதியில்!

கோபன்ஹேகன், ஜூன் 30

யூரோ கிண்ண உதைபந்தாட்ட தொடரில் ஸ்பெயின் அணி காலிறுதிக்கு முன்னேறியது.



கோபன்ஹேகனில் நேற்றிரவு நடந்த 16 அணிகள் சுற்றில் குரோஷியா - ஸ்பெயின் அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் 5 - 3 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

காலிறுதியில் ஸ்பெயின் அணி, சுவிற்சர்லாந்து அணியை சந்திக்கின்றது. (ஐ)

# சில பிரதேசங்கள் முடக்கம் பல பிரதேசங்கள் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 30

நாட்டில் மேலும் சில பிரதேசங்கள் நேற்றுக் காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு கிராம சேவகர் பிரிவுகளே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக கொழும்பு மாவட்டத்தில் சிங்கப்புர கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட சங்கிந்தசேவன வீட்டுத் திட்டத்தைத் தவிர ஏனைய பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் கல்பொருல்ல 100ஆம் தோட்டப் பகுதி முடக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காலி மாவட்டத்தில் கோணகல கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பொல்துடுவ கிராமம், அம்பாறை மாவட்டத்தில் மீராவோடை கிழக்கு 207ஆம் பிரதேசம், மட்டக்களப்பு மாவட்டத்தில் மாஞ்சோலை பதுரியா 207 ஏ ஆகிய பிரதேசங்கள் நேற்றுக் காலை 6 மணிக்குத் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளன.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் கலுதமத, ஹப் புகஸ்தலாவ, வீரபுர மற்றும் பஹல கோரகஓய ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப் படுத்தலிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் எட்டிஹேன கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பொல்ஹேன வீதி, லேக்வீவ வீதி உள்ளிட்ட சில பகுதிகளும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. (இ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 19 - 09 - 1942

உதிர்வு 01 - 06 - 2021

### திருமதி பவளராணி நல்லையா

கந்தரோடை - லண்டன்

அம்மா என்றாலே அன்பு
அன்பான அம்மாவே நீங்கள் எம்மை விட்டு
பிரிந்து இன்று முப்பத்தொரு நாட்கள்
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
வாழ்ந்து காட்டியவரே எங்கள் அம்மா
எத்தனை உறவுகள் எங்கள் வாழ்வில் வந்தாலும்
அம்மா என்ற உங்கள் புன்னகைக்கு ஈடாகுமா?
எத்தனை கஷ்டங்கள் எங்கள் வாழ்வில் ஏற்பட்டாலும்
உங்களுடன் வந்து கதைக்கும் அந்த நொடி எல்லாமே மறந்திடுமே.
தன்னம்பிக்கையுடன் வல்லமையையும் கொண்டு
அன்புடன் கண்டிப்பையும் காட்டி வளர்த்த எங்கள் அம்மாவே
மென்மையான உங்கள் உள்ளம்
பல உதவிகளை எல்லோருக்கும் செய்ய வைத்தீர்கள்
அன்புடன் எம்மை அணைத்து
எங்களை அரவணைத்து வழிநடத்தினீர்களே அம்மா
திடீரென ஆண்டவன் தன்னுடன் அழைத்து
எங்களை தவிக்கவிட்டானே அம்மா
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
அம்மா உங்களைப் போல் ஆகமுடியுமா?

தொடர்புகளுக்கு:
**தயாளபதி (மகன்)** - 00919159540807
**தயாநந்தன் (மகன்)** - 00447923439722
**தயாபரன் (மகன்)** - 00447534126660

தகவல்:
**குடும்பத்தினர்.**

## விபத்துக்களில் 12 பேர் மரணம்

விபத்துக்களால் நேற்றுமுன்தினம் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

8 பேர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் எனவும், ஏனையவர்கள் இதற்கு முன்பு நடைபெற்ற விபத்துக்களில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 8 பேரும், பாதசாரிகள் மூவரும், ஓட்டோவில் பயணித்த பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (இ)


## வைத்திய சேவை

கிருமித் தொற்றுக் காரணமாக வைத்தியசலைக்குச் செல்லாமல் வீடுகளில் இருக்கும் நோயாளர்களே
உங்களுக்காக வெளிநோயாளர் பிரிவு (OPD) ஆரம்பம்
காலை 8 மணி முதல் 11 மணிவரை

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
**077 873 0129**


## மரண அறிவித்தல்



மலர்வு 27 - 10 - 1955

உதிர்வு 27 - 06 - 2021

### துரைச்சாமி தேவதாஸ்

( Fort General Manager - கிளிநொச்சி)

யாழ். புளியங்கூடல், ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா Torontoவை வதிவிடமாகவும் கொண்ட துரைச்சாமி தேவதாஸ் அவர்கள் கடந்த 27-06-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார், துரைச்சாமி – இந்திரபூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும்,சந்திரகாந்தா (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், மகேந்திரன், கணேசன், வாசுகி, சுந்தஞானி, ஈஸ்வரன், ராஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரஞ்சினி, சசிகலா, சிறீதரன், பத்மநயனி, சுகந்தா, சிறீபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

*பார்வைக்கு :* Wednesday, 30 Jun 2021 1:00 PM - 2:30 PM Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*கிரியை :* Wednesday, 30 Jun 2021 2:30 PM - 4:00 PM Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*தகனம்:* Wednesday, 30 Jun 2021 4:30 PM Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதி அஞ்சலி Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada வில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு : **மகேந்திரன் - சகோதரன்**
Mobile : +14164181399

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 23 - 09 - 1930

உதிர்வு 28 - 06 - 2021

### திருமதி கமலா தம்பி

( Retired teacher from Vadahindu Girls School, PointPedro, Sri Lanka, Retired teacher from Nigeria, Retired Bank officer from Toronto, Canada)

யாழ். அல்வாயைப் பிறப்பிடமாகவும், கனடா Scarboroughவை வசிப்பிடமாகவும் கொண்ட கமலா தம்பி அவர்கள் நேற்றுமுன்தினம் (28.06.2021) திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந் தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும்,காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பி அவர்களின் அன்பு மனைவியும்,தமயந்தி, இராகவன், முரளீதரன், அசோகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பத்மாவதி டெல்விஸ் அவர்களின் அன்புச் சகோதரியும்,Harmeet, தயாராணி, Lucy, சுபத்திரிக்கா ஆகியோரின் அன்பு மாமியாரும்,ரசிகா, Angud, தன்யா, சத்தியா, திமோதி, மலிசா, கரோலினா, நவீன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், Aden அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்கு :*
Wednesday, 30 Jun 2021 11:00 AM - 12:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada,

*கிரியை :*
Wednesday, 30 Jun 2021 12:30 PM - 2:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*தகனம்:*
Wednesday, 30 Jun 2021 2:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**அசோகன் - மகன்**
Mobile : +14162581054
Phone : +19054301865

தகவல்
**குடும்பத்தினர்.**

## பயங்கரவாத...

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 16 கைதிகளுக்கு இலங்கை ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்றபோதும், கடுமையான இந்தச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கான கடப்பாட்டை இலங்கை நிறைவேற்றவில்லை என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான தனது உறுதிமொழியை இலங்கை அரசு நிறைவேற்றாவிட்டால் அந்நாட்டுக்கு வழங்கப்படும் ஜி.எஸ்பி. பிளஸ் வரிச் சலுகையை இரத்துச் செய்யவுள்ளதாக அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

இவ்வாறான நிலையில் பொசன் பூரணை தினமாக ஜூன் -24 ஆம் திகதி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 பேர் உட்பட 94 பேர் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டனர். இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் பெரும்பாலும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராகவே பயன்படுத்தப்படுகிறது. சித்திரவதை மூலம் பலவந்தமாகப் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் இவர்கள் பலர் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறான பாதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ததுடன், சக அரசியல்வாதியைக் சுட்டுப் படுகொலை செய்த குற்றத்துக்காக நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது அரசியல் கூட்டாளியான துமிந்த சில்வாவுக்கும் இலங்கை ஜனாதிபதி பொது மண்ணிப்பு வழங்கி விடுவித்தார்.

நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட தனது அரசியல் கூட்டாளிக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பளித்தமையானது இலங்கையின் சட்டத்தின் ஆட்சியைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. அத்துடன், பொதுமன்னிப்பளிக்கும் அதிகாரம் தனிப்பட்ட விருப்பு-வெறுப்புக்களின்பால் பயன்படுத்தப்படுகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கூறினார்.

2019 -இல் பதவியேற்றதிலிருந்து ராஜபக்ஷ அரசு தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறது. அதே நேரத்தில் சிறுபான்மை குழுக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாட்டைத் தூண்டுவோர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாஃப் ஜஸீம் ஆகியோர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக அதை இன்னும் மோசமாக தாக்குவதற்கான நடவடிக்கைகளை கோட்டாபய ராஜபக்ஷ எடுத்துவருகிறார்.

மார்ச் மாதத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் புதிய விதிமுறைகள் அறிவிக்கப்பட்டன. இது இன, மத மற்றும் வகுப்புவாத ரீதியாக செயற்பட்டு தேசிய ஒற்றுமையை சீர்குலைப்பதாக குற்றஞ்சாட்டப்படும் எவரையும் இரண்டு ஆண்டுகள் வரை விசாரணையின்றி சிறையில் அடைக்க வழி செய்கிறது.

அத்துடன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோரை கொழும்பில் ஒரு மோசமான சித்திரவதை தளத்தில் தடுத்து வைத்து விசாரிக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்தார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என இப்பகுதி வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தாரென மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு மற்றும் கிழக்கில் ராஜபக்ஷ அரச நிர்வாகத்தின் கீழுள்ள பாதுகாப்புப் படைகளால் ஏராளமான சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் துன்புறுத்தல்கள் மற்றும் மிரட்டல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறான துஷ்பிர யோகங்களுக்கு வழிவகுக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என சர்வதேசத்தில் இருந்தும் உள்நாட்டில் இருந்து தொடர்ச்சியான அழைப்புக்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இடம்பெறும் மோசமான துஷ்பிரயோகங்களை ஐக்கிய நாடுகள் சபை வல்லுநர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமைகள் குழுக்கள் விரிவாக ஆவணப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை நீக்காவிட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இரத்துச் செய்யும் தனது அறிவிப்புக்கு குறித்த ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப் பகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளது.

## அமெ. தூதருடன்...

லிட்ஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் நாமல் ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில்,

“இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கல் மூலம் கிடைக்கும் பல வாய்ப்புகள் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வழிகள் குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன் கலந்துரையாடினோம்.

நாட்டில் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பதோடு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கும் எதிர்பார்க்கின்றோம்” - என்றார். (இ)

## 1,709 பேருக்கு...

அத்துடன்,கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 222 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 23 ஆயிரத்து 471 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 716 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## யாழில் மேலும்...

ரிழந்தார்.

யாழ்ப்பாணம், வெள்ளாந்தெருவைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 5 ஆயிரத்து 291ஆக உயர்வடைந்துள்ளது. நேற்று செவ்வாய்க்கிழமை 101 பேருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

## கரடிப்போக்கு...

லிருந்த தொலைபேசி இணைப்பு கம்பத்தினையும் உடைத்து சேதப்படுத்தி உள்ளது.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பஸிலுக்காக எம்.பி. பதவியை தியாகம் செய்வதற்கு பலரும் தயாராகவுள்ளனர்

## எதிரணியினர் அச்சமடைந்துள்ளனர் என்கிறார் டிலான்

கொழும்பு, ஜூன் 30

“நெருக்கடிமிக்க நிலையில் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வர வேண்டும் என்பது பொதுவான நிலைப்பாடாகும். சாதாரணமாக பாராளுமன்றத்திற்குச் சென்றவர்கள் அந்தப் பதவியை இலகுவில் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆனால், பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக தங்களின் ஆசனத்தை தியாகம் செய்ய முண்டியடிக்கின்றனர்” எனக் கூறியிருக்கின்றார் பொது ஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை நெலும்மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு:

“கடந்த வாரத்தில் கோவிட் பிரச்னை இருக்கும்போது எரிபொருள் விலையேற்றம் ஏற்பட்டபோது எதிர்கட்சியினர் மற்றும் பிரதான சில ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக பஸில் ராஜபக்ஷவே காணப்பட்டார். கொரோனாவை விட எதிர்கட்சியினருக்கு பஸில் ராஜபக்ஷவே இன்று பெரிய பிரச்னையாக உள்ளார்.

அவர் எமது கட்சியின் ஸ்தாபகராவார். எமது கட்சியின் உறுப்பினர்களை நியமிக்க, மாற்றுவதற்கு எமது கட்சிக்கு உரிமையுள்ளது. ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக வந்தபோது அவரை மாற்றும்படி நாங்கள் கூறினோமா? இல்லை. அது அந்தக் கட்சியின் உரிமை.

நாம் எடுக்கின்ற தீர்மானங்களினால் எதிர்தரப்பினர் அச்சமடைந்தால் எமது முடிவு சரியானதேயாகும். பஸில் ராஜபக்ஷவின் பாராளுமன்ற மீள்வருகையினால் ஐக்கிய தேசியக்கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியினரே இன்று கொரோனாவை விடவும் அச்சமடைந்துள்ளனர். பஸில் ராஜபக்ஷ வெறுமனே ராஜபக்ஷ குடும்பத்தினரை அல்லாமல், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியை உருவாக்கியவர். மொட்டுக்கட்சி சின்னத்தில் முற்தரப்பு போட்டியை வெற்றிபெற்றது.



2018 ஆம் ஆண்டில் சஹ்ரான் அல்ல, சஹ்ரானின் அவதாரம்கூட இருக்கவில்லை.

உள்ளூராட்சி சபையில் 85 சத வீதத்தை வெற்றிபெறச் செய்யவைத்தது பஸிலாகும்.

இந்த விருப்பு வாக்குமுறையில் எந்தக் கட்சியும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறமுடியாது என்று அதனை உருவாக்கியவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார். 113 ஆசனங்கள்கூட பெற மிகவும் சிரமமாக இருந்தது. எனினும் இந்த முறையில் பெரும்பான்மை மக்கள் ஆணையை பாராளுமன்றத்தில் பெற்று மீண்டும் மொட்டுக் கட்சியில் அனைவரும் தஞ்சமடைந்தனர். எமது அரசாங்கத்தை உருவாக்கி 20 ஆவது திருத்தத்தை அமைத்தபோது டயானா உள்ளிட்ட தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்ட 6 பேர் மொட்டுக் கட்சியுடன் இணைந்தார்கள். தேர்தலில் மாத்திரமல்ல, பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னரும் எதிர்கட்சியினரின் ஆதரவு கூட கிடைத்துள்ளது. இந்த கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் இரசாயன உரப் பயன்பாட்டினை ஜனாதிபதி தடுத்துள்ளார்.

இப்படியான நெருக்கடிமிக்க நிலையில் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வரவேண்டும் என்பது பொதுவான நிலைப்பாடாகும். சாதாரணமாக பாராளுமன்றத்திற்குச் சென்றவர்கள் அந்தப் பதவியை இலகுவில் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். ஆனால் பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்காக தங்களது ஆசனத்தை தியாகம் செய்ய முண்டியடிக்கின்றனர்” எனவும் அவர் தெரிவித்தார்.

# கொலைக்கு நீதி கிடைக்கும்வரை தொடர்ந்து குரல் கொடுப்போம்!

மட்டக்களப்பு, ஜூன் 30

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக அமைச்சரின் மெய்பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்ட சின்னஊறணியை சேர்ந்த மகாலிங்கம் பாலசுந்தரனின் கொலைக்கு நீதி கிடைக்கும் வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுக்கும் என்று அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி மட்டக்களப்பு, ஊறணி, மன்றேசா வீதியில் உள்ள இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்பாக சாரதி ஒருவர் கொல்லப்பட்டார்.

இவ்வாறு கொல்லப்பட்டவரின் வீட்டுக்கு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா சாணக்கியன் நேற்று சென்றிருந்தார்.

இதன்போது தனது மகன் திட்டமிட்டு கொல்லப்பட்டாரெனவும் அவரின் மகனின் கொலைக்கு நீதி வேண்டும் என்றும் பெற்றோர் கோரினர்.

இதன் பின்னர் ஊடகங்களை சந்தித்த இரா. சாணக்கியன் எம்.பி. , “எதிர்காலத்தில் குறித்த குடும்பத்திற்கு தேவையான உதவிகளை முன்னெடுக்க தயார் என்றும், கொல்லப்பட்டவருக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கவேண்டும் எனவும் கூறினார். (ஐ)

## அடுத்த 10...

உள்ளன. தடுப்பூசிகளின்போது மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது இதுதான் காரணம்.

பேராசிரியர் நீலிகா மாலவிகே உள்ளிட்ட வல்லுநர்கள் நாட்டில் டெல்டா வைரஸ் திரிபு தொற்று பரவும் ஆபத்து இருப்பதாக எச்சரித்துள்ளனர்.

கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் குறையவில்லை என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ளவேண்டும். மேலும் புதிய அச்சுறுத்தல் டெல்டா திரிபு பரவும் அபாயமும் உள்ளது.

இலங்கையில் இதுவரை 12 கர்ப்பவதி பெண்கள் கோவிட்-19 வைரஸ் தொற்றினால் உயிரிழந்தனர்” என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டார். (அ)

## 3 ஆயிரத்தைக்...

திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 30 ஆக அதிகரித்துள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# உணவு தட்டுப்பாடு நிலவுகிறதா? 3 மாதங்களுக்கு சமாளிக்க முடியும்

## சவாலை எதிர்கொள்ள வேலைத்திட்டம் ஆரம்பம் என்கிறது அரசு

கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவு கையிருப்பில் இருக்கின்றது என அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எனினும், அதனைத் தொடர்ந்தும் பேணிச் செல்வது சவாலாக அமைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பில், நாட்டின் உணவுக் கையிருப்பு தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உணவுக் கையிருப்பு தொடர்பாகக் கூறப்படும் விடயங்களில் ஒரு பகுதி சரியாக இருந்தாலும், அமைச்சரவை தொடர்ந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தி வருகின்றது.

நாட்டின் பிரதான வருமான வழிகள் தடைப்பட்டுள்ள நிலையிலும் அரசு உணவுக் கையிருப்பை நிர்வகிக்க முயற்சிக்கின்றது.

அரசு இன்னும் ஒரு மாதத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தவணையை செலுத்த வேண்டியுள்ள நிலையிலும், உணவுக் கையிருப்பு தொடர்பான சவாலைத் தீர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது" - என்றார். (இ)



# மறுசீரமைக்கப்படுமா அமைச்சரவை? ஜனாதிபதியே தீர்மானம் எடுப்பார்

## ஊடகவியலாளரின் கேள்விக்கு கெஹலிய பதில்

கொழும்பு, ஜூன் 30

"அமைச்சரவை மறுசீரமைக்கப்படுமா என்பது தொடர்பில் ஜனாதிபதியே தீர்மானம் எடுப்பார். அதற்கான அதிகாரம் அவருக்கே இருக்கின்றது. தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் அறிவிப்பு விடுக்கப்படும்."

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ)

# 'கொரோனா'வை விரட்ட ஒரே ஆயுதம் தடுப்பூசியே

## அதை பெற்றுக்கொள்ள எவரும் தயங்கக்கூடாது என்கின்றார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

கொழும்பு, ஜூன் 30

"பெருந்தொற்று நோயான கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த எம்மிடம் இருக்கும் ஒரேயொரு ஆயுதம் தடுப்பூசியே. எனவே, கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் தயங்கக்கூடாது. 30 வயதுக்கு மேற்பட்டவார்கள் அனைவரும் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் தவறாது பெற வேண்டும்."


- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் செயற்திட்டம் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அடுத்த மாதத்தில் அதிகளவில் தடுப்பூசிகள் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 30 இலட்சம் தடுப்பூசிகளை இதுவரை ஏற்றியுள்ளோம். அடுத்த இரு மாதங்களில் பெரும்பான்மையான மக்களுக்கு முழுமையாகத் தடுப்பூசிகளை ஏற்ற முடியும்.

சில இடங்களில் கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள மக்கள் பின்னடிக்கின்றார்கள். மக்கள் இவ்வாறு அச்சமடைவது ஆபத்தையே ஏற்படுத்தும். இந்தத் தடுப்பூசியில்தான் கொரோனாவை எதிர்கொள்ளக்கூடிய நோய் எதிர்ப்பு சக்தி உள்ளது.

இதேவேளை, நாட்டில் சில இடங்களில் மட்டும் 'டெல்டா' உள்ளிட்ட உருமாறிய கொரோனா வைரஸ்களின் அச்சுறுத்தல் நிலை இருக்கின்றது. எனினும், நாட்டை முடக்கவோ அல்லது



பயணக் கட்டுப்பாடுகளை பிறப்பிக்கவோ இப்போது எந்தத் தீர்மானமும் எடுக்க வில்லை. ஆனால், நாட்டின் அடுத்த கட்ட நிலைமைகளுக்கு அமைய தீர்மானங்கள் எப்போதும் மாறலாம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலைமை எவ்வாறு உள்ளது என்பதை அவதானித்து, சுகாதாரப் தரப்பினர் ஒவ்வொரு நாளும் இது குறித்து தரவுகளைப் பதிவு செய்கின்றனர். அத்துடன் கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்திலும் ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும்.

தற்போதுள்ள நிலையில் இரண்டாயிரத்துக்கும் குறைவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். மரணங்களும் நாளாந்தம் ஐம்பதுக்கும் குறைவாகப் பதிவாகின்றன. எனவே, நிலைமைகள் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும்.

ஆனால், வைரஸ் தொற்று பரவவில்லை எனக் கருத்தில் கொள்ளக் கூடாது என சுகாதாரத் தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். அடுத்த ஒரு மாத காலம் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். மக்களின் செயற்பாடுகளில் தான் இது தங்கியுள்ளது" - என்றார். (இ)




# மரண அறிவித்தல்

மலர்வு 11 - 07 - 1944



உதிர்வு 24 - 06 - 2021

## Rev. திருமதி பத்மா சிவானந்தன்

**Chartered Accountant, Bachelor of Religious Education**

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், யாழ். அச்சுவேலி, கனடா Toronto, Ontario மற்றும் Victoria, British Columbia(B.C.) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட Rev. திருமதி பத்மா சிவானந்தன் கடந்த (24.06.2021) வியாழக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ராஜகாரியர் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், சிவா சிவானந்தன், B.Sc., (Financial Advisor Sun Life, கனடா) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற புனிதா, B.A- குமார்(கனடா), Dr. நகுலேந்திரன் - சில்வியா (சிங்கப்பூர்), சச்சி (ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்)- சியாமளா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரகாஷ் (B.C.Assessment Authority- கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், பன்மொழி (Dir., Island Health B.C.- கனடா) அவர்களின் அன்பு மாமியும், கிற்றனா (கனடா), செலீனா (கனடா), ரியானா (கனடா) ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற மகேஸ்வரி - சுப்பிரமணியம் (இலங்கை), காலஞ்சென்ற சிவதாசன் (Electrical Engineer, Ceylon Electricity Board இலங்கை) - சந்திரா (கனடா), காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, யோகேந்திரன், மற்றும் Dr.மனோன்மணி - காலஞ்சென்ற சிவதொண்டன் (இலங்கை), Dr.லோகேஸ்வரி - குமாரசாமி (நியூசிலாந்து), விமலாதேவி - காலஞ்சென்ற ஜெயதேவன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

பத்மா தலைமை கணக்காளராக Jafferjee Brothers (இலங்கை) யிலும் நிதிக் கட்டுப்பாட்டாளராக Radicals Ltd. (Toronto, கனடா) விலும் கடமையாற்றினார். அர்ப்பணிபுள்ள பத்மா, Master's College and Seminary (கனடா) இல் honours உடன் பட்டம் பெற்றார். அவரின் வாழ்நாளில் எல்லா வயதினரையும் கருணையுடன் வழிநடத்தி, ஆலோசனை கொடுத்து, ஆறுதல் படுத்தினார்.கனடாவில் விக்ரோறியா, B.C க்குச் செல்வதற்கு முன்பு அவர் பல ஆண்டுகளாக Malvern கிறீஸ்தவ தமிழ் சபையின் போசகராக இருந்தார்.நிதிக் கட்டுப்பாட்டாளராக Watoto Canada விலும், தலைமை கணக்காளராக B.C.புற்றுநோய் நிறுவனம் (Victoria, கனடா) விலும் கடமையாற்றினார். ஒரு திறமையான சொற்பொழிவாளரான அவர் அநேகருக்கு வேதத்தை கற்றுகொடுத்து கர்த்தருக்குள் வழி நடத்தினார், மற்றும் தமிழ் இணைய நற்செய்தி வானொலி நிலையமான Waves of Power மூலமும் மேன்பட்ட பிரசங்கங்களை வழங்கினார். Rev.பத்மா தமது அன்புக்குரியவர்கள், நண்பர்கள் மற்றும் ஆண்டவருக்கும் அவர் செய்த உண்மையுள்ள சேவை மற்றும் நற்செய்தி மீதான ஆர்வம், அவரது அன்பான ஆளுமை, அக்கறையுள்ள இருதயம் மற்றும் பிரகாசமான புன்னகை ஆகியவற்றால் அவர் பல ஆண்டுகள் ஊழியம் செய்தவர்களால் அன்பாக நினைவு கூரப்படுவார். அவருடைய வாழ்க்கைக்காக நாம் ஆண்டவரை மகிமைப்படுத்துகிறோம்.

அன்னாரின் இறுதிக்கிரியை 29-06-2021 செவ்வாய்க்கிழமை அன்று காலை கனடா Victoria, British Columbia(B.C.) இல் குடும்ப உறுப்பினர்களுடன் மட்டும் நடைபெறும்.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக் தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங் கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக் காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளு வேன்" என்று ஆண்டவராகிய இயேசு கிறீஸ்து கூறியுள்ளார். (யோவான் 14:1-3)

நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரி!

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**சிவா சிவானந்தன் - கணவர்**
Mobile : +14169104567

தகவல்
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்:
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கழுகு,ராட்சசி
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-
சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-
10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
7.00 மணி : பாரதீ- இந்த வார ஆளுமை-
பாடசாலை அதிபர்-
நிரஞ்சனா ஜெயகிருஸ்ணா



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்